இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

# 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புச் சட்டம்

*[1991, யூலை மாதம் 03 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1991 யூலை 05 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : ரூபா 4,80* — *தபாற் செலவு : ரூபா 3.85*

# 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புச் சட்டம்.

[1991 யூலை மாதம் 03 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.—ஒ. 71/90

**தொலைத்தொடர்புப் பணிப்பாளர் – தலைமையதிபதியொருவரின் நியமனத்துக்கு ஏற்பாடு செய்வதற்கும், தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் எல்லா ஆதன உரிமைகளையும், பொறுப்புக்களையும், 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான கட்டளையின் கீழ் தாபிக்கப்பட்ட "இலங்கைத் தொலைத்தொடர்" என்றழைக்கப்படும் கூட்டுத்தாபனத்துக்குக் கைமாற்றுதலுக்கும், 192 ஆம் அத்தியாயமான தொலைத்தொடர்பு கட்டளைச்சட்டத்தினை நீக்கஞ் செய்வதற்கும்; அத்துடன் அதனுடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம் 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை தொலைத்தொடர்புச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 72 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் தவிர்ந்த இச் சட்டத்தின் ஏற்பாடுகள் இச்சட்டம் பாராளுமன்றத்தின் சட்டமாக வரும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். 72 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் நியமிக்கக் கூடியவாறான அத்தகைய நாளன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வருந் தேதிகளும்.

## பாகம் I

## தொலைத்தொடர்புப் பணிப்பாளர் தலைமையதிபதியின் நியமனம்

**2.** இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "அதிகாரி" எனக் குறிப்பீடு செய்யப்படும் தொலைத்தொடர்புப் பணிப்பாளர் தலைமையதிபதி ஒருவர் பெயர்வழியாக அல்லது பதவி வழியாக நியமிக்கப்படவேண்டுமென்பதுடன், இச்சட்டத்தினால் அல்லது இச் சட்டத்தின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு குறித்தொதுக்கப்பட்ட பணிகளைப் புரியும் நோக்கங்களுக்கான அதிகாரியாதலும் வேண்டும். தொலைத் தொடர்புப் பணிப்பாளர் தலைமையதிபதியின் நியமனம்.

**3.** இச்சட்டத்தின் நோக்கத்துக்கு அவசியமாகக்கூடிய அத்தகைய அலுவலர்களும் சேவையாளர்களும் நியமிக்கப்படலாம். அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நியமனம்.

**4.** அதிகாரி, தேசிய நலனை மேம்படுத்துவதற்கு மிகச் சிறந்தது என அவர் எண்ணும் அத்தகைய முறையிலும், குறிப்பாகப் பின்வரும் விடயங்களிலும் இச்சட்டத்தின் கீழான அவரின் தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும். பொதுவான குறிக்கோள்கள் அதிகாரியினால் எய்தப்படுதல்.

2—டீ 012914—1,450 (91/02)

(அ) அவசரகாலச் சேவைகள், பகிரங்க அழைப்புக் கூடச் சேவைகள், விவரக்கொத்துத் தகவல் சேவைகள், கரையோரச் சேவைகள், கிராமிய சேவைகள் உள்ளடக்கப்பட்ட (அதனை ஏற்பாடு செய்தல் செயல்முறையில் சாத்தியமாகாதிருக்கும் அளவுக்குத் தவிர) எல்லா நியாயமான கோரிக்கைகளையும் திருப்திசெய்யக்கூடிய நம்பகமானதும், திறமையானதுமான தேசிய மற்றும் சர்வதேச தொலைத்தொடர்புச் சேவையை ஏற்பாடு செய்வதுடன், தேசிய நன்மை கருதி மற்றைய இடப் பரப்புக்களில் அவசியமாகக் கூடிய சேவைகளை உறுதி செய்தல்;

(ஆ) பந்தி (அ) வின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி, அவரது உரிமத்தில் குறித்துரைக்கப்படும் சேவைகளை ஏற்பாடு செய்வதற்கு அவசியமான தொழில்நுட்ப, நிதி சார் அத்துடன் முகாமைத்துவ வளங்களை ஒவ்வொரு இயக்குநரும் வைத்திருத்தலையும் ஊழியத்தில் ஈடுபடுத் தலையும் உறுதிசெய்தல்;

(இ) ஏற்பாடு செய்யப்பட்ட தொலைத்தொடர்புச் சேவைகள் அத்துடன் வழங்கப்பட்ட தொலைத்தொடர்பு உபகரணங் கள் ஆகியவை தொடர்பில் அவற்றின் தரம், இனம் தொடர்பிலும் அறவிடப்படும் கட்டணங்கள் தொடர்பிலும் நுகர்வோர், கொள்வனையாளர் மற்றும் ஏனைய பாவனை யாளர்களின் நலன்களையும் பகிரங்க நலனையும் பாது காத்தலும் மேம்படுத்தலும் ;

(ஈ) தொலைத்தொடர்புடன் தொடர்புபட்ட வர்த்தகச் செயற் பாடுகளில் ஈடுபட்டுள்ள ஆட்களிடையே திறமையான போட்டியைப் பேணுதலும், ஊக்குவித்தலும், அத்துடன் அத்தகைய ஆட்களைப் பொறுத்தவரை அவர்களின் திறமையையும் சிக்கனத்தையும் மேம்படுத்தல் ;

(உ) உள்ளூர் மற்றும் சர்வதேச தொலைத்தொடர்புகளின் துரித நிலைபேறான அபிவிருத்தியை மேம்படுத்தல் ;

(ஊ) தேவையற்ற காலதாமதம் அல்லது தடங்கல் அல்லது தடை இல்லாது, நம்பகமானதும், திறமையானதுமான சேவையை ஏற்பாடு செய்வதற்கு இயக்குநர்களுக்கு உள்ள கடப்பாட்டை நிறைவேற்ற அவர்களுக்கு இயலக் கூடியதாயிருப்பதை உறுதி செய்தல்;

(எ) தொலைத்தொடர்புத் துறையிலும், அத்துடன் தொடர்புற்ற துறைகளிலும் ஆராய்ச்சி, அபிவிருத்தி செய்தல்; அத்துடன் புதிய தொழினுட்பங்களைப் பயன்படுத்து வதனையும் மேம்படுத்தலும்;

(ஏ) இலங்கைக்கு வெளியே வியாபார இடங்களை வைத்தி ருக்கும் பெரும்பான்மையான தொலைத்தொடர்புப் பாவனையாளர்கள் இலங்கையில் வியாபார இடங்களைத் தாபிப்பதனை ஊக்குவித்தல்; அத்துடன்

(ஐ) சர்வ தேச ஊடுகடப்பு சேவைகளை இலங்கையில் பயன்படுத்துவதை மேம்படுத்தல்.

அதிகாரியின் தத்துவங்களும் கடமைகளும்.

5. நான்காம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காக, அதிகாரி பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) நாட்டின் முழுமொத்த பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் மிகச் சிறந்த முறையில் சேவையாற்றிப் பங்களிப்புச் செய்யும் வகையில் நாட்டிலுள்ள தொலைத்தொடர்புச் சேவைகள் தொழிற்படுவதனை வலியுறுத்தல்;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் தொலைத்தொடர்பை இயக்குவதற்கான உரிமங்களை வழங்குவதில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்கல்;

(இ) இறுப்புக்கள் மீதான காப்புவரி கொள்கைகளை நிர்ணயித்தல், மானியங்கள் மற்றும் பகிரங்கத் தொலைத் தொடர்புச் சேவைகளை ஏற்பாடு செய்வதற்குத் தேவைப்படும், சட்டவாக்க வழிவகைகள் என்பன உட்பட, தொலைத்தொடர்பு கருமங்கள் தொடர்பாக அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கல்;

(ஈ) இயக்குநர் ஒருவரால் ஏற்பாடு செய்யப்பட்ட தொலைத் தொடர்புச் சேவைகள் தொடர்பாக பொதுமக்களின் நலனுக்கும்; அத்துடன் பொது மக்களின் வசதிக்கும் விருப்பங்களுக்கும் முறையான கவனத்தைச் செலுத்தல்;

(உ) அதிகாரியின் கடமைகளை நிறைவேற்றல் தொடர்பாகவும், தத்துவங்களைப் புரிதல் தொடர்பாகவும், அமைச்சரினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படக்கூடியவாறான அத்தகைய பொதுவான கொள்கைப் பணிப்புக்களுக்கு இணங்கியொழுகுதலும் 67 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக் கிணங்க அவரால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய தகவல்களைக் கொடுத்துதவுதல் ;

(ஊ) தேசிய பந்தோபஸ்து, பொது ஒழுங்கு மற்றும் நாட்டின் பாதுகாப்பு என்பனவற்றின் நலன் கருதி, இலங்கை அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் அவருக்கு விடுக்கப்படக் கூடிய எவையேனும் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புக்களுக்கு இணங்கியொழுகுவதற்கு விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஒழுங்காக்கல் வழிவகைகளை எடுத்தல் ;

(எ) உபகரணம் தொடர்பாகவும், தொழில்நுட்பத் தராதரங்கள் தொடர்பாகவும் சருவதேசத் தொலைத்தொடர்புகள் சங்கத்தினாலும் மற்றும் ஏனைய இயைபான சருவதேச ஒழுங்கமைப்புக்களினாலும் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு எவரேனும் இயக்குநரைப் பணித்தல் ;

(எ) தொலைத்தொடர்பு தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினால் உடன்பட்ட சருவதேச அல்லது வேறு கடப்பாடுகளுக்கு இயக்குநர்கள் இணங்கியொழுகுவதனை வலியுறுத்தல்

(ஐ) தொலைத்தொடர்புத் தொகுதியொன்றைத் தாபிப்பது தொடர்பான தராதரங்கள் மற்றும் நடைமுறைகள் என்பன தொடர்பில் சர்வதேசத் தொலைத்தொடர்புச் சங்கத்துடனும் வேறு சர்வதேசக் குழுக்களுடனும் வெளிநாட்டுத் தொலைத் தொடர்பு இயக்குநர்களுடனும் உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளை நடாத்துவதில், வேண்டிக்கொள்ளப்படுமிடத்து, இயைபான அமைச்சுக்களுக்கு உதவியளித்தல் ;

(ஒ) தொலைத்தொடர்பு சம்பந்தப்பட்ட சர்வதேச மாநாடுகளில் அல்லது சர்வதேச மற்றும் வெளிநாட்டுக் குழுக்களில் அவ்வாறு தேவைப்படுத்தப்படுமிடத்து அல்லது அமைச்சரின் அல்லது வேறு ஏதேனும் இயைபான அமைச்சின் வேண்டுகோளின் பேரில் அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தல் ;

(ஓ) அரசாங்கக் கொள்கையையும் இயக்குநர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட தொலைத்தொடர்புச் சேவைகள் தொடர்பில் இயக்குநர்களின் தேவைப்பாடுகளையும் கவனத்துக் கெடுத்து, இறுப்புகளை அல்லது அத்தகைய இறுப்புகளைத் தீர்மானிப்பதற்கான முறைகளை அமைச்சரினதும் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினதும் ஆலோசனையுடனும் விதிகள் மூலம் குறித்துரைத்தல் ; ஆயின், கைமாற்றல் தேதிக்கு நேரே முன்னர் வலுவிலுள்ள இறுப்பு வீதங்களும் அழைப்பு இறுப்பனவுகளும் வேறு எவையேனும் இறுப்பனவுகளும் தொடர்ந்து வலுவில் இருத்தல் வேண்டும் என்பதுடன் இச்சட்டத்தினது ஏற்பாடுகளின்கீழ் மீளாய்வு செய்யப்படும்வரை அல்லது திருத்தப்படும்வரை, இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட இறுப்புகளாகக் கருதப்படுதலும் வேண்டும்;

(ஔ) உரிமம்பெற்ற ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட தொலைத் தொடர்புத் தொகுதிகளின் இயக்குநர்கள் அவர்களுக்கிடையேயான அழைப்புக்களுக்கான இறுப்பனவுகள் மீது உடன்படக் கூடியவர்களாக இருக்குமிடத்து, அத்தகைய இறுப்பனவுகளையும் ஒன்றோடொன்று இணைக்கப்படுவதன் இறுப்பனவுகளையும் அங்கீகரித்தலும், இயக்குநர்கள் உடன்படாதவிடத்து அத்தகைய இறுப்பனவுகளைத் தீர்மானித்தலும் ;

(க) அதிகாரியினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறாக அத்தகைய கணக்கீட்டு முறைமையை மேற்கொள்ளுமாறு தொலைத் தொடர்புத் தொகுதிகளின் உரிமை பெற்ற இயக்குநர்களைத் தேவைப்படுத்துதல் ;

(ங) ஒலிக்கடத்துதல் வரைபடங்கள், சைகை காட்டல் வரை படங்கள், ஆளியிடும் மற்றும் இலக்கமிடும் வரைபடங்கள் என்பவற்றை அவருக்குச் சமர்ப்பிக்குமாறு எவரேனும் இயக்குநரைத் தேவைப்படுத்துதலும், அத்தகைய வரைபடங்களை அங்கீகரித்தலும் அல்லது திரிபுபடுத்துதலும் அவற்றை வெளியிடுதலும் அத்தகைய வரைபடங்களுக்கு இணங்கியொழுகுவதனை வலியுறுத்தலும் ;

(ச) தொலைத்தொடர்புச் சேவைகளை ஏற்பாடு செய்வதற்குத் தொழினுட்பத் தராதரங்களையும் நடைமுறைகளையும் குறித்துரைத்தல் ;

(ஞ) தொலைத்தொடர்பில் தொழினுட்ப ஆள்வலுவின் கல்விக்கும் பயிற்சிக்குமான தராதரங்களைக் குறித்துரைத்தல் ;

(ட) தொலைத்தொடர்புத் தொகுதியுடன் இணைக்கப்படக்கூடிய தொலைத்தொடர்பு உபகரணங்களை அங்கீகரித்தல் ;

(ண) இயக்குநர்களினால் ஏற்பாடுசெய்யப்படும் சேவைகளின் தரத்தைக் கண்காணிப்பதற்கு அவசியமெனக் கருதப்படக் கூடியவாறான பணிப்புகள் விடுப்பது உட்பட, அத்தகைய ஒழுங்காக்கல் வழிவகைகளை எடுத்தலும், சேவைத்தரம் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் ஆக்கரபடும் விதிகள்மூலம் குறித்துரைக்கப்படும் சேவைத் தரங்களுடன் இச் சேவைகள் இசைந்தொழுகுகின்றனவா என்பதை வலியுறுத்தலும் ;

(த) இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களிலும் ஆராய்ச்சி நிறுவனங்களிலும் தொலைத்தொடர்பு ஆராய்ச்சியையும் அபிவிருத்தியையும் இயக்குநர்களின் ஒத்துழைப்புடனோ வேறுவகையாகவோ மேம்படுத்தல் ;

(ந) இச்சட்டத்தின்கீழ் அதிகாரி, தனது தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் சம்பந்தமான ஏதேனும் கருமத்தின் மீது அவருக்கு ஆலோசனையளிக்கும் நோக்கத்துக்காக அவர் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய ஆலோசனைக் குழுக்களைத் தாபித்தல் ;

(ப) ஒரு வானொலி அலைக்கற்றை அல்லது ஏதேனும் தகவற்றொடர்பு வசதிக்கு ஏதேனும் தடையை அல்லது முட்டுக்கட்டையை ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கு அல்லது அத்தகைய ஏதேனும் தடையை அல்லது முட்டுக்கட்டையை, அகற்றுவதற்கு ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்துடன் அல்லது வேறு ஆளுடன் பேச்சுவார்த்தை நடாத்துதல்;

(ம) இயக்குநர்களினுலும் வானெலி அதிர்வெண்களைப் பயன்படுத்தவேண்டிய வேறு ஒழுங்கமைப்புகளினுலும் தனியாட்களினுலும் வானெலி அதிர்வெண்அலை வேறுபாட்டையும் பாதுகாப்பதனையும் முறையாகப் பயன்படுத்துவதனையும் வலியுறுத்தல் ;

(ய) மின் உபகரணங்களினுல் ஏற்படுத்தப்படும் மின்காந்தக் குழப்பங்களையும் சகல அதிகாரமளிக்கப்படாத வானெலி அதிர்வு வெளிவிடுகைகளையும் குறைப்பதற்காக, விதிகளுடன் இணங்கியொழுகச் செய்தலும், அவ்வாறு இணங்கியொழுகுவதனை வலுவுக்கிடுதலும்;

(ர) அதிகாரியின் குறிக்கோள்களை எய்துவதற்கு இடைநேர் விளைவாகக்கூடிய அல்லது உசிதமாகக்கூடிய அத்தகைய எல்லா வேறு செயல்களையும் செய்தல்.

தொழினுட்பத் தராதரங்களைப் பேணுவதற்காக அதிகாரி பரீட்சைகளை நடாத்துதல்.

6. (1) இச்சட்டத்தின்கீழ் அவரின் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும், போதுமானதும் திறமையானதுமான தொலைத்தொடர்புச் சேவைகளை ஏற்பாடு செய்யும் நோக்கத்துக்கு அவசியம் எனக் கருதப்படக்கூடியவாறுன அத்தகைய தொழினுட்ப தராதரங்களைத் தாபித்துப் பேணும் நோக்கத்துக்காக, விதித்துரைக்கப்பட்ட தொழினுட்பப் பரீட்சைகளை அதிகாரி நடாத்தலாம்.

(2) ஓராமுட்பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதில் அதிகாரி, பரீட்சைகளை நடாத்தும் நோக்கத்துக்காக பரீட்சகர் சபைகளை நியமிக்கலாம்.

(3) பரீட்சைகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து இறுக்கப்படவேண்டிய கட்டணங்கள் விதித்துரைக்கப்பட்டவாறுனவையாக இருத்தல் வேண்டும்.

எல்லாத் தகவல்களையும் தருமாறு தேவைப் படுத்துவதற்கு பார்வையிடும் அதிகாரிக்குள்ள தத்துவம்.

7. அதிகாரி—

(அ) இயக்குநர் ஒருவரின் நிதிசார் ஸ்திரப்பாட்டையும் அலுவல்களின் உண்மை நிலையையும் கண்டறிவதை அதற்கு இயலச்செய்யும் நோக்கத்துக்காக, எழுத்திலான அறிவித்தல்மூலம், அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறுன அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக—

(i) பார்வையிடுவதற்கு அவசியமென அதிகாரியினுல் கருதப்படும் அத்தகைய இயக்குநரின் எல்லாப் புத்தகங்களையும் கணக்குகளையும் ; உடன்,

(ii) மேற்சொல்லப்பட்ட நோக்கங்களுக்காக அதிகாரியினுல் தேவைப்படுத்தப்படக்கூடியவாறுன தொழினுட்ப, நிதிசார் அல்லது வேறுவகையான அத்தகைய எல்லாத் தகவல்களையும்

கொடுத்துதவுமாறு அத்தகைய இயக்குநரைத் தேவைப்படுத்தலாம் :

ஆயின், எவ்வாறுயினும், அத்தகைய ஏதேனும் தேவைப்பாட்டுக் கிணங்கியொழுகுவதில் இயக்குநரால் அதிகாரிக்குக் கொடுத்

தப்பட்ட எல்லாத் தகவல்களையும் அந்தரங்கமானதாக அதிகாரி கருதுதல் வேண்டும் :

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அவரது தத்துவங்களையும், பணிகளையும் அல்லது கடமைகளையும் பிரயோகிக்கும், புரியும் அத்துடன் நிறைவேற்றும் நோக்கத்துக்காக, எவரேனும் ஆளை—

(i) அவரது கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள ஓம் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டதும் அல்லது விவரிக்கப்பட்டதுமான ஏதேனும் ஆவணத்தை அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய நேரத்துள்ளும், அத்தகைய இடத்திலும் அதிகாரிக்குக் கொடுத்துதவுமாறும் ;

(ii) அவரது உடைமையில் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேனும், புத்தகத்தை, விபரத்திரட்டை, கணக்கினை அல்லது பதிவேட்டினைப் பார்வையிடுவதற்காகக் காண்பிக்குமாறும்

எழுத்திலான அறிவித்தல் மூலம் தேவைப்படுத்தலாம் :

ஆயின், எவ்வாறுயினும் ஒரு நீதிமன்றத்தின் முன்னரான குடியியல் நடவடிக்கைகளின்போது காண்பிக்குமாறு கட்டாயப் படுத்தப்படமுடியாத ஏதேனும் ஓர் ஆவணத்தை அத்தகைய ஏதேனும் நோக்கத்துக்காகக் காண்பிக்குமாறு இப்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள எவரேனும் ஆள் கட்டாயப்படுத்தப்படுதலாகாது.

**இயக்குநரின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்றும் ஆண்டறிக்கையும்.**

8. ஒவ்வோர் இயக்குநரும், நிதியாண்டு முடிவடைந்தன் பின்னர் இயலக்கூடியளவு விரைவாக, அந்நிதியாண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்றுடன் சேர்த்து அவ்வாண்டின் போதான வருமான, செலவினத்தையும் செயற்பாடுகளையும் பற்றிய தனது உண்மையானதும் செம்மையானதுமான விவரத்தைத் தரும் அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அறிக்கையையும் கணக்குக் கூற்றையும் அதிகாரிக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.

**முறைப்பாடுகள் பற்றி அதிகாரி விசாரித்தல்.**

9. (1) தொலைத்தொடர்புச்சேவையொன்றுக்கான சந்தாதாரர் அல்லது பொதுமக்களுள் ஒருவர், இயக்குநர் ஒருவரினால் ஏற்பாடுசெய்யப்பட்ட தொலைத்தொடர்புச் சேவை தொடர்பாக அதிகாரிக்கு முறைப்பாடொன்றைச் செய்கின்றவிடத்து, அவர் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நுண்ணாய்வை அதிகாரி மேற்கொள்ளலாம் என்பதுடன், விடயத்தின் சந்தர்ப்ப சூழ்நிலைகள் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய பரிகார வழிவகைகளை எடுத்தலும் வேண்டும்.

(2) ஓராமுட்பிரிவின்கீழான ஏதேனும் நுண்ணாய்வின்போது முறைப்பாடு எழுவதற்குக் காரணமாக இருந்த ஏதேனும் காரணத்தை அல்லது விடயத்தைச் சீர்படுத்துவதற்கு அவசியமானதென அவர் கருதும் அத்தகைய நடவடிக்கைகளை எடுக்குமாறு அத்தகைய இயக்குநரை அதிகாரி பணிக்கலாம்.

(3) ஓராமுட்பிரிவின்கீழ்ச் செய்யப்படும் முறைப்பாடு ஒவ்வொன்றும் எழுத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன், அதற்கான காரணத்தினைத் தெளிவாக எடுத்துக்காட்டுதலும் வேண்டும்.

அதிகாரி வானொலி அதிர்வு அலை வேறுபாட்டினை முகாமை செய்வதற்கான பூரண அதிகாரியாக இருத்தல்.

10. (1) வானொலி அலை அதிர்வெண் அலைவேறுபாட்டின் பயன்பாட்டையும் அத்துடன் அதன் இடைநேர்விளைவானவற்றையும் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வெளிவிடுகை, பூகோள நிலையான செய்மதிச் சுற்றுவட்டத்தினையும் முகாமைசெய்து கட்டுப்படுத்துவதற்கும் அதிகாரி, இலங்கையின் பூரண சட்டபூர்வ குழுமமாக இருத்தல் வேண்டுமெனபதுடன், அவர் அவசியமானதெனக் கருதுமிடத்து அத்தகைய எதேனும் வெளிவிடுகையை மீளப்பெறுதலுக்கு அல்லது அதன் பயன்பாட்டை இடைநிறுத்துவதற்கு அல்லது தடுப்பதற்குத் தத்துவமுடையவராதலும் வேண்டும்.

(2) அதிகாரி, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள எல்லாக் கருமங்களிலும் சர்வதேச தொலைத் தொடர்புச் சங்கத்துடனோ அல்லது அதன் இணைந்த குழுக்களுடனோ பேச்சுவார்த்தை நடாத்துவதற்குப் பூரண சட்டபூர்வ அதிகாரியாதல் வேண்டும்.

உரிமத்தின் நிபந்தனைகளை வலுவுக்கிடுதல்.

11. (1) தொலைத்தொடர்புத் தொகுதியொன்றை இயக்குவதற்கு 17 ஆம் பிரிவின்கீழான உரிமமொன்றின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டவரான ஆள் ஒருவர் அவரது உரிமத்தின் நிபந்தனைகளுள் எதனையும் மீறுகின்றார் என அல்லது மீறியுள்ளாரென அதிகாரி திருப்திப்படுமிடத்து, அதிகாரி (2) ஆம் உட்பிரிவிற்கு அமைவாக, அத்தகைய நிபந்தனைக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காகக் கட்டளை ஒன்றை ஆக்கலாம் அல்லது (3) ஆம் உட்பிரிவுக்கமைவாக அத்தகைய எதேனும் கட்டளையை இல்லாதொழிக்கலாம்.

(2) ஓராமுட்பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்குமுன்னர் அதிகாரி—

(அ) கட்டளையை ஆக்குவதற்கு அவர் உத்தேசித்துள்ளாரென கூறுதலும் அதன் பயனை எடுத்துக்காட்டுவதும் ;

(ஆ) உரிமத்தின் இயைபான நிபந்தனையையும் அவரது அபிப்பிராயப்படி அதன் மீறுகையான அல்லது மீறுகையாக அமைவதான செயல்களை அல்லது தவிர்வுகளைக் கூறுவதும் ; அத்துடன்

(இ) (அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இருபத்தெட்டுநாட்களுக்குக் குறையாததான) எக் காலத்துக்குள் உத்தேச கட்டளைக்கான முறையீடுகள் அல்லது ஆட்சேபனைகள் செய்யப்படலாமோ அக்காலத்தைக் குறித்துரைப்பதும்

ஆன அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டுமென்பதுடன், முறையாகச் செய்யப்பட்டனவும், மீளப் பெறப்படாதனவுமான எவையேனும் முறையீடுகளை அல்லது ஆட்சேபனைகளைப் பரிசீலித்தலும் வேண்டும்.

(3) ஓராமுட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒரு கட்டளையை இல்லா தொழிக்குமுன்னர், அதிகாரி—

(அ) கட்டளையை இல்லாதொழிப்பதற்கு அவர் உத்தேசித்துள்ளாரெனக் கூறுதலும் அதன் பயனை எடுத்துக்காட்டுவதும்; அத்துடன்

(ஆ) (அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இருபத்தெட்டு நாட்களுக்குக் குறையாததான) எக்காலத்துக்குள் உத்தேச இல்லாதொழிப்புக்கான முறையீடுகள் அல்லது ஆட்சேபனைகள் அத்தகைய இல்லாதொழிப்பில் அக்கறையுள்ள எவரேனும் ஆளினால் செய்யப்படலாமோ அக் காலத்தைக் குறித்துரைப்பதும்,

ஆன அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டும் என்பதுடன், முறையாகச் செய்யப்பட்டு மீளப் பெறப்படாதனவான எவையேனும் முறையீடுகளை அல்லது ஆட்சேபனைகளைப் பரிசீலித்தலும் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழான அறிவித்தலொன்று, அறிவித்தல் தொடர்புறுத்தும் விடயங்களை அவ்வறிவித்தலினால் பாதிக்கப்படக்கூடியவர்களான ஆட்களின் கவனத்துக்குக் கொண்டுவரும் நோக்கத்துக்குத் தோதானதென அதிகாரி கருதும் அத்தகைய முறையில் வெளியிடுவதன் மூலமும் அதனால் பாதிக்கப்பட்ட இயக்குநருக்கு அறிவித்தலின் பிரதியொன்றை அனுப்புவதன் மூலமும் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(5) ஓராமுட்பிரிவின்கீழ் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்று ஆக்கப்பட்டதன் பின்னர், இயலக்கூடியளவு விரைவாக, அதிகாரி—

(அ) கட்டளையினால் பாதிக்கப்படக்கூடிய ஆட்களின் கவனத்துக்குக் கட்டளையைக் கொண்டுவரும் நோக்கத்துக்குத் தோதானதென அவர் கருதும் அத்தகைய முறையில் கட்டளையை வெளியிடுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அதனால் பாதிக்கப்பட்ட இயக்குநருக்குக் கட்டளையின் பிரதியொன்றைச் சேர்ப்பித்தல் வேண்டும்.

பகிரங்க விசாரணையும் நடவடிக்கை முறையும்.

12. (1) அதிகாரி, அவருக்குச் செய்யப்பட்ட முறையீடுகள்மீது அல்லது வேறுவகையாக, அவரின் தத்துவங்களின் பிரயோகம் அல்லது உத்தேசப் பிரயோகம் தொடர்பிலான ஏதேனும் கருமம் பொதுமக்கள் நலன்கருதி நுண்ணாய்வு செய்யப்படுதல் அல்லது தீர்மானிக்கப்படுதல் அவசியமானதென அவர் கருதுகின்றவிடத்து, அவரின் சொந்தப் பிரேரணைமீது பகிரங்க விசாரணை ஒன்றை நடாத்தலாம்.

(2) அதிகாரி, பொதுமக்கள் நலன்கருதி அமைச்சர் அவ்வாறு பணிக்கின்றவிடத்து, அத்தகைய பணிப்பில் குறித்துரைக்கப்பட்ட தொலைத்தொடர்பு தொடர்பிலான ஏதேனும் காரணம் அல்லது கருமம் தொடர்பில் பகிரங்க விசாரணை ஒன்றை நடாத்தலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் பகிரங்க விசாரணையொன்றை நடாத்தும் நோக்கத்துக்காக (இதன கத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) விசார ணைக் குழுவொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அது, அதிகாரியை அல்லது அத்தகைய குழுவின் ஏதேனும் கூட்டத்தில் தலைமை தாங்கவேண்டியவரும், அவரால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவருமான வேறு எவரேனும் உலுவல ரையும் அதிகாரியினால் அந்நோக்கத்துக்காக பெயர் குறித்து நியமிக்கப்படும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேறு அலுவலர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் குழுவினால் நடாத்தப்படவுள்ள ஏதேனும் பகிரங்க விசாரணையிலான நடவடிக்கைகள், நுண்ணுயவின் கீழான கருமங்கள் தொடர்பிலான எண்பிப்பை அல்லது செய்திக் தகவலை வெளிக்கொணருவதற்குச் சிறந்த முறையில் இசை வாக்கப்பட்டதென குழுவுக்குத் தோற்றக்கூடிய இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இராத எம்முறையிலும் நடாத் தப்படலாம்.

(5) குழு, சான்று அல்லது வாதங்கள் எழுத்தில் சமர்ப்பிக்கப் படவேண்டுமெனத் தேவைப்படுத்தலாமென்பதுடன் எக்கருமங்கள் மீது வாய்மூலச் சான்றை அல்லது வாதங்களைக் கேட்குமோ, அக்கருமங்களை முடிபும் செய்யலாம்.

(6) குழு, வாய்மூலமோ அல்லது ஆவணமாகவோ அளிக்கப் பட்ட சான்று எதனையும் ஏற்றுக்கொள்ளலாம் அல்லது நிரா கரிக்கலாமென்பதுடன் சான்றின் ஏற்புடைமை தொடர்பான சான்றுக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகா.

(7) குழுவின் முன்னர் சான்றளிக்கின்ற ஆள் ஒவ்வொரு வரும், அத்தகைய சான்று தொடர்பில், நீதிமன்றத்தின் முன் னர் அவரால் அளிக்கப்படும் சான்று தொடர்பில் அத்தகைய நீதிமன்றத்தின் முன்னர் சான்று கொடுக்கும் சாட்சியொருவ ருக்கு உரித்தான எல்லாச் சிறப்புரிமைகளுக்கும் உரித்துடைய வராதல் வேண்டும்.

(8) பகிரங்க விசாரணையொன்றிலான நடவடிக்கைகள் பொது மக்கள் பார்வையிடக்கூடியதாதல் வேண்டுமென்பதுடன் கொடுக் கப்பட்ட சான்றின் பொழிப்பு, மற்றும் பரிசீலனைக்கெடுக்கப்பட்ட சகல நிகழ்வுகளும் பற்றிய கூற்று என்பன உட்பட, அதன் குறிப்புக்கள், விசாரணைக்குத் தலைமைதாங்கும் உறுப்பினரினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

(9) குழு, இப்பிரிவின் கீழான பகிரங்க விசாரணையின் விடயப் பொருளாக ஆக்கப்பட்ட ஏதேனும் கருமத்தை நேர்த்தியானதும் போதுமான அளவிலும் சமர்ப்பிப்பதற்கு நியாயமான அளவு அவசியமான காலப்பகுதிகளைத் தீர்மானித்தல் வேண்டும் என்ப துடன், அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட முறையான அந்தந்தக் காலப்பகுதிகளுக்குள் அவை சமர்ப்பிக்கப்படவேண்டுமெனவும் தேவைப்படுத்தலாம்.

(10) கட்டளைவிட்டழைக்கப்பட்ட எவரேனும் ஆள் அல்லது எத்தகைய ஆளின் நலன்கள் குழுவின் முன்னரான ஏதேனும் கருமத்தினால் பாதிக்கப்படக்கூடுமோ அத்தகைய எவரேனும் ஆள் தாமாகவோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி மூலமோ தோற்றலாம்.

(11) குழுவின் உறுப்பினரிடையே அபிப்பிராய பேதம் இருக்கும் பட்சத்தில் பெரும்பான்மையினரின் முடிபு குழுவின் முடிவாதல் வேண்டும்.

(12) ஒரு பகிரங்க விசாரணையின்போது அல்லது அதன் முடிவில் குழுவானது—

(அ) அதன் முன்னரான கருமம் அல்லது அதன் பாகம் தொடர்பில் அதற்கான காரணங்களுடன் கட்டளையொன்றை அல்லது அளிப்பொன்றை ஆக்கலாம் அல்லது அதற்கான காரணங்களுடன் பணிப்பொன்றை, விடுக்கலாம்;

(ஆ) ஏதேனும் கருமம் அல்லது அதன் பாகம் அற்பமானதென அல்லது அலைக்கழிக்கும் தன்மையானதென அல்லது பொது மக்கள் நலன் கருதி மேலும் நடவடிக்கைகள் அவசியமில்லையென அல்லது விரும்பத்தக்கனவல்லவெனத் தோற்றினால் அக் கருமத்தை, அல்லது கருமத்தின் பாகத்தைத் தள்ளுபடி செய்யலாம் அல்லது அக் கருமத்தை அல்லது அதன் பாகத்தை மேற்கொண்டு விசாரிப்பதை அல்லது தீர்மானிப்பதைத் தவிர்க்கலாம்;

(இ) அதன் முன்னருள்ள ஏதேனும் கருமத்தை விரைவாகவும் நீதியாகவும் விசாரித்துத் தீர்மானிப்பதற்கு அவசியமான அல்லது உசிதமான அத்தகைய எல்லாப் பணிப்புக்களையும் பொதுவாக விடுக்கலாமென்பதுடன், அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்யலாம்.

(13) பன்னிரெண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியினைப் பின்பற்றி ஆக்கப்பட்ட கட்டளை அல்லது அளிப்பு ஒவ்வொன்றும் விடுக்கப்பட்ட பணிப்பு ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கட்டளை, அளிப்பு அல்லது பணிப்பு ஒவ்வொன்றினதும் பிரதி பகிரங்க விசாரணையின் ஒவ்வொரு திறத்தவருக்கும் சேர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

சான்று கொடுப்பதற்கு ஆட்களைக் கட்டளை விட்டழைப்பதற்குள்ள தத்துவம்.

13. (1) குழுவின் முன்னரான ஏதேனும் கருமம் தொடர்பில் குழுவின் அபிப்பிராயப்படி சாட்சியமளிக்கக்கூடிய அல்லது ஏதேனும் ஆவணத்தைக் காண்பிக்கக்கூடிய எவரேனும் ஆளை 12 ஆம் பிரிவின்கீழ் நடாத்தப்படும் பகிரங்க விசாரணையொன்றுக்கு வருமாறு கட்டளை விட்டழைப்பதற்கு குழு தத்துவமுடையதாதல் வேண்டும் என்பதுடன், அவரைச் சத்தியத்தின் மீது அல்லது உறுதியுரையின்மீதும் விசாரிக்கலாம். அவ்வாறு

சமுகமளிக்கின்ற எவரேனும் ஆளுக்கு, அவ்வாறு சமுகமளிப்ப தில் அவரால் அவசியமாக உறப்பட்ட நியாயமான செலவுகள் அனுமதிக்கப்படலாம்.

(2) குழுவின் முன்னர் தோற்றுமாறு கட்டளை விட்டழைக்கப் பட்ட எவரேனும் ஆள்—

(அ) அழைப்புக்கட்டளையில் கூறப்பட்ட நேரத்திலும் இடத்திலும் நியாயமான காரணமின்றி தோற்றுவதற்குத் தவறினால் ; அல்லது

(ஆ) நியாயமான காரணமின்றிச் சத்தியஞ்செய்ய மறுத்தால் அல்லது முறையாகச் சத்தியஞ்செய்துகொண்ட பின்னர் குழுவினால் அவரிடம் கேட்கப்பட்ட ஏதேனும் வினாவுக்கு நியாயமான காரணமின்றி மறுமொழி கூற மறுத்தால் அல்லது தவறினால் அல்லது அத்தகைய ஏதேனும் வினாவுக்கு வேண்டுமென்று பொய்யான மறுமொழி கொடுத்தால் ; அல்லது

(இ) அவர் வசம் இருக்கின்றனவும் காண்பிக்குமாறு அவர் தேவைப்படுத்தப்பட்டனவுமான எவையேனும் ஆவணங் களை குழுவின் முன்னர் காண்பிப்பதற்கு நியாயமான காரணமின்றி மறுத்தால் அல்லது தவறினால்,

அத்தகைய ஆள் குழுவுக்கெதிரான அவமதிப்புத்தவறுக்கு அல்லது குழுவின் அதிகாரத்தை அவமரியாதை செய்த தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட குழுவுக் கெதிரான அல்லது அதன் அதிகாரத்தை அவமரியாதை செய்த தவறு எதனையும் ஆளொருவர் புரிந்துள்ளாரென அது தீர் மானிக்கின்றவிடத்து, குழு, அதன் தீர்மானத்தை எடுத்துக்காட்டும் சான்றிதழொன்றை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு, தலைமை தாங்கும் உறுப்பினரைக் கொண்டு அனுப்புவித்தல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு சான்றிதழும் அட் டகிரங்க விசாரணையில், தலைமைதாங்குகின்ற உறுப்பினரால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(4) மேன்முறையீட்டு நீதிமன்றம் நீதிநெறிக்கவனத்துக்கு எடுப்பது பொருத்தமானதென எண்ணக்கூடிய அவமதிப்புத் தவறொன்றின் தண்டனைக்கான ஏதேனும் வழக்குநடவடிக்கை யில் (3) ஆம் உட்பிரிவின்கீழ் கையொப்பமிடப்பட்டு அந்த நீதி மன்றத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட சான்றிதழ் ஒன்றெனக் கொள்ளப்படும் ஆவணம் எதுவும்—

(அ) முரணானது என எண்பிக்கப்பட்டாலொழிய, மேலதிக எண்பிப்பு எதுவும் இன்றி சான்றாக ஏற்றுக்கொள் ளப்படுதலும், அத்தகைய சான்றிதழ் ஒன்றெனக் கருதப்படுதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) சான்றிதழில் எடுத்துக் காட்டப்பட்ட தீர்மானம் குழுவினால் செய்யப்பட்டதென்பதற்கும் தீர்மானத்தில் கூறப்பட்ட நிகழ்வுகளுக்கும் முதற்றோற்றச் சான்றுதலும் வேண்டும்.

(5) பன்னிரண்டாம் பிரிவின்கீழ் நடாத்தப்பட்ட பகிரங்க விசாரணையொன்றில் குழுவுக்கு எதிராக அல்லது அதன் அதிகாரத்தை அவமரியாதை செய்து புரியப்பட்ட அவமதிப்புத் தவறு ஒவ்வொன்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கெதிராக அல்லது அதன அதிகாரத்தை அவமரியாதை செய்து புரியப்பட்ட அவமதிப்புத் தவறொன்றென்றுற்போன்று அதேமுறையில் அந் நீதிமன்றத்தினால் அல்லது அதன் எவரேனும் நீதிபதியினால் தண்டிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

சட்டப் பிரச்சினை பற்றி மேன்முறையீடு செய்வதற்கு அமைவாக, ... 11ஆம், 12 ஆம் பிரிவுகளின் கீழ் செய்யப்பட்ட கட்டளைகளின் இறுதியாந் தன்மை.

14. (1) அதிகாரியினால் 11 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றும், குழுவினால் 12 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை, அளிப்பு அல்லது பணிப்பு ஆகியவை (2) ஆம் உட்பிரிவுக்கு அமைவாக இறுதியானதாதல் வேண்டும்.

(2) பதினோராம் பிரிவின் கீழ் அல்லது 12 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை, அளிப்பு அல்லது பணிப்பு ஒன்றினால், இடருற்றவரான எவரேனும் ஆள் சட்டப்பிரச்சினை மீது மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான மேன்முறையீடொன்று எழுத்திலான மனுமூலமாதல் வேண்டும் என்பதுடன்—

(அ) அக்கட்டளை, அளிப்பு அல்லது பணிப்பு எக்கடிதத்தொடர்பு மூலம் மேன்முறையீட்டாளருக்கு அறிவிக்கப்பட்டதோ அக்கடிதத் தொடர்புத் தேதியின் பின்னர் முப்பது நாட்களுக்குள்ளாக அதிகாரிக்கு முப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும் ;

(ஆ) விடயத்துக்கேற்ப அதிகாரியின் அல்லது குழுவின் கட்டளை, அளிப்பு அல்லது பணிப்பினையும் விவாதிக்கப்படவுள்ள சட்டப் பிரச்சினையையும் எடுத்துக்கூறுதலும் வேண்டும்;

(இ) எவரேனும் அவசியமான திறத்தவரை அத்தகைய மேன்முறையீட்டுக்காக. ஓர் எதிர்மனுதாரராக ஆக்குதலும் வேண்டும் ;

(ஈ) ஆயிரம் ரூபாக் கட்டணமொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

(4) மேன்முறையீட்டு மனுவொன்று, (3) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட முறையிலும் காலத்திற்குள்ளும் அதிகாரிக்குச் சமர்ப்பிக்கப்பட்டவிடத்து, அவர்—

(அ) எந்த நடவடிக்கைகளின்போது கட்டளை, அறிவிப்பு அல்லது பணிப்பு ஆக்கப்பட்டதாக அல்லது கொடுக்கப்பட்டதாக மனுவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளதோ அந்த நடவடிக்கை

களின் பதிவேட்டுடன் சேர்த்து மனுவின் பிரதியொன்றை மேன்முறையீட்டு நீதி மன்றத்துக்கு அனுப்புதல் அல்லது அனுப்புவித்தல் வேண்டும் ;

(ஆ) மேன்முறையீட்டு மனுவின் பிரதியொன்றுடன் சேர்த்து அம்மனுவில் பெயர் குறிப்பிடப்பட்ட எதிர்மனுதாரருக்கு மேன்முறையீட்டு அறிவித்தலை வழங்குதல் அல்லது வழங்கச்செய்தல் வேண்டும் ; அத்துடன்,

(இ) அம்மனுவின் பிரதியொன்றைப் பதிவேட்டில் கோப்பிடுதல் அல்லது கோப்பிடுவித்தல் வேண்டும்.

(5) மேன்முறையீட்டு நீதிமன்றம் அத்தகைய சட்டப் பிரச்சினையைத் தீர்மானிக்கையில் விடயத்துக்கேற்ப அதிகாரியின் அல்லது குழுவின் கட்டளையை, அளிப்பை அல்லது பணிப்பை உறுதிப்படுத்தலாம், வேறு படுத்தலாம் அல்லது இல்லாதாக்கலாம் அல்லது தோதானவையெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுடன் சட்டப்பிரச்சினை மீதான அந் நீதிமன்றத்தின் முடிவுடன் சேர்த்து அதிகாரிக்கு அல்லது குழுவுக்கு அவ்விடயத்தைத் திருப்பி அனுப்பலாம்.

**ஆவணங்களின் சான்று.**

**15.** உண்மையான பிரதியொன்றென அதிகாரியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும், அதிகாரியினால் ஆக்கப்பட்டதும் அல்லது அவரின் கட்டுக்காப்பிலுள்ளதுமான ஏதேனும் விதியின், கட்டளையின், அளிப்பின், பணிப்பின் அல்லது வேறு ஆவணத்தின் பிரதியொன்று அல்லது குழுவினால் ஆக்கப்பட்ட ஒரு கட்டளையின் அளிப்பின் அல்லது பணிப்பின் உண்மைப் பிரதியென அத்தகைய குழுவின் தலைமை தாங்கும் உறுப்பினரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கட்டளையின், அளிப்பின் அல்லது பணிப்பின் பிரதியொன்று அதிகாரியின் அல்லது குழுவின் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமை தாங்கும் உறுப்பினரின் கையொப்பம் பற்றிய மேலதிக எண்பிப்பு இன்றி நீதிமன்றம் எதிலும் அவ்விதியின், கட்டளையின், அளிப்பின், பணிப்பின் அல்லது வேறு ஆவணத்தின் சான்றாக இருத்தல் வேண்டும்.

**11 ஆம், 12 ஆம் பிரிவுகளின் கீழ் ஆக்கப்பட்ட ஒரு கட்டளையை, அளிப்பை அல்லது பணிப்பை மீறுதல்.**

**16.** பதினோராம் பிரிவின்கீழான அதிகாரியின் கட்டளையொன்றை அல்லது 12 ஆம் பிரிவின் கீழான குழுவின் கட்டளை அளிப்பு அல்லது பணிப்பொன்றைச் சட்டப்படியான அதிகாரமின்றி மீறுகின்ற அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆள் எவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணத்துக்கு ஆளாதலும்; அத்துடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர் தவறு தொடர்ந்து புரியப்படும் சந்தர்ப்பத்தில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர், அத்தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாள் தொடர்பிலும் ஆயிரம் ரூபாவை விஞ்சாத மேலதிகக் குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

## பாகம் II

### உரிமமளித்தல்

17. (1) பிரிவு 20 இன் ஏற்பாடுகளுக்கமைய, ஆளெவரும், (2) ஆம் உட்பிரிவுக்கிணங்க அமைச்சரினால் வழங்கப்பட்ட உரிமத்தின் அதிகாரத்தின் கீழன்றி இலங்கையில் தொலைத்தொடர்புத் தொகுதியொன்றை இயக்குதலாகாது. ஆளெவரும் உரிமமின்றித் தொலைத் தொடர்புத் தொகுதியை நடாத்துதலாகாது.

(2) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஓர் உரிமத்தை அதிகாரியின் விதப்புரையின்மீது வழங்கலாம் ; ஆயின் குறித்தொதுக்கப்பட்ட காரணங்களுக்காக அத்தகைய விதப்புரையை நிராகரித்து, தனது சொந்த தற்றுணிபின்படி உரிமத்தை வழங்குவதற்கு அவர் தத்துவமுடையவராதல் வேண்டும்.

(3) (அ) அதிகாரி, அவ்வாறு செய்தல் பொதுமக்களின் நன்மைக்கானதாகுமெனக் கருதுமிடத்து, உரிமமொன்றின் வழங்குகையை அமைச்சருக்கு விதந்துரைப்பதற்கான அவரது முன்னத்தைப் பற்றித் தோதானதென அவர் கருதுகின்றவாறான அத்தகைய முறையில் அவர் பகிரங்க அறிவித்தலைக் கொடுக்கலாம்.

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவித்தல்—

(i) குறிப்பிட்டவோர் ஆளுக்கு உரிமமொன்றின் வழங்குகையை விதந்துரைப்பதற்கு அவர் உத்தேசிக்கின்றதெனக் கூறுதல் வேண்டும் ;

(ii) உத்தேசிக்கப்பட்ட உரிமத்தின் வழங்குகை தொடர்பிலான முறையீடுகள் அல்லது ஆட்சேபனைகள் எக்காலத்தினுள் (அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இருபத்தியெட்டு நாட்களுக்குக் குறையவிருத்தலாகாது) செய்யப்படலாமோ அக்காலத்தைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(இ) அத்தகைய அறிவித்தலுக்கிணங்க உரியமுறையில் செய்யப்பட்ட முறையீடு அல்லது ஆட்சேபனை ஒன்று, அதிகாரியினால் சீர்தூக்கிப்பார்க்கப்படுதல் வேண்டும்.

(4) உரிமத்துக்கான விண்ணப்பமொவ்வொன்றும் எழுத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன் அதிகாரியால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அதிகாரிக்குச் செய்யப்படுதலும் வேண்டும்.

(5) உரிமமொன்றினை வழங்குகைக்கான விதப்புரையின் முன்னர், எந்தத் தொலைத்தொடர்புத் தொகுதியை இயக்குவதற்காக, விண்ணப்பதாரர் உரிமம் பெற, விண்ணப்பித்துள்ளாரோ, அந்தத் தொலைத்தொடர்புச் சேவைகளை அவர் இயக்க ஆற்றலுடையவராயுள்ளாரென்பது பற்றி அதிகாரி தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(6) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழான உரிமமொன்று—

(அ) விதித்துரைக்கப்பட்ட உரிமத்துக்கான கட்டணத்தை விண்ணப்பகாரர் செலுத்துவதன்மீது வழங்கப்படுதல் வேண்டும்.

(ஆ) உரிமம் எழுத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன் உரிமத்தில் அடங்கியுள்ள அதற்கான ஏதேனும் நியதிக்களுக்கிணங்க முன்னர் இல்லாதொழிக்கப்பட்டிருந்தாலொழிய, அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு வலுவில் தொடர்ந்திருத்தலும் வேண்டும் ;

(இ) உரிமமானது எந்த நியதி நிபந்தனைகளுக்கமைய வழங்கப்படுகின்றதோ அந்த நியதி நிபந்தனைகளைக் குறிப்பிடுதல் வேண்டும் ;

(ஈ) உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டவாறாக அத்தகைய தொலைத்தொடர்புத் தொகுதி மூலம் தொலைத் தொடர்புச் சேவைகளை ஏற்பாடு செய்வதனைக் தேவைப் படுத்துதல் வேண்டும் ;

(உ) உரிமம் எத்தொலைத்தொடர்புத் தொகுதி தொடர்பானதோ அத்தொலைத்தொடர்புத் தொகுதியுடன்—

(i) உரிமத்திற் குறித்துரைக்கப்பட்ட வேறேதேனும் தொலைத்தொடர்புத் தொகுதியையும்; அத்துடன்

(ii) உரிமத்திற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் உபகரணத்தையும்

இணைப்பதற்காக அதிகாரமளிக்கலாம்;

(ஊ) உரிமம் எத்தொலைத்தொடர்புத் தொகுதி தொடர்பானதோ, அந்த ஏதேனும் தொலைத்தொடர்புத் தொகுதி மூலம் உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் தொலைத் தொடர்புச் சேவைகளை ஏற்பாடு செய்வதற்கு அதிகாரமளிக்கலாம்.

(7) ஆறும் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட நியதி நிபந்தனைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம் :—

(அ) நான்காம் பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்திற் கொண்டு, தேவையானவையென அல்லது உசிதமானவையென அமைச்சருக்குத் தோன்றுகின்றவாறான அத்தகைய நிபந்தனைகள் (உரிமம் தொடர்புபட்டுள்ள தொலைத் தொடர்புத் தொகுதியை இயக்குதல் தொடர்பானவையாயினுஞ்சரி வேறுவகையானவையாயினுஞ்சரி) ;

(ஆ) உரிமம் வழங்கப்பட்டதன்மீது கொடுப்பனவை அல்லது உரிமம் நடப்பிலிருக்கும்போதான கொடுப்பனவுகளை அல்லது வழங்கப்படுதலின்மீதும் உரிமம் நடப்பிலிருக்கும் போதுமான கொடுப்பனவுகளையும், அத்துடன் அதிகாரியினால் தீர்மானிக்கப்படக்கூடிய உரிமத்தினை அளிப்பதில் அவரால் உறப்பட்ட செலவுகளை மேவுதற்கான அத்தகைய பணம் அல்லது பணங்களையும், அத்துடன் இயக்குநரின் ஆண்டு மொத்த வரவின்மீது கணக்கிடப்பட்ட ஒரு வருடாந்த தீர்வையையும், விதித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக அதிகாரியினால் பயன்படுத்தப்படுவதற்காக அதிகாரிக்குத் கொடுக்கும்படித் தேவைப்படுத்துகின்ற நிபந்தனைகள் :

(இ) இயக்குநர் ஒருவரை, அதிகாரியினால் நியாயமாகத் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும், அத்தகைய நேரங்களிலும், இச்சட்டத்தின் கீழ் அவரது கடமைகளைப் புரிவதற்கு அதிகாரி, தேவைப் படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய ஆவணங்களை, கணக்குகளை, மதிப்பீடுகளை, விபரத் திரட்டுக்களை அல்லது வேறு செய்தித் தகவலை அதிகாரிக்குக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்துகின்ற நிபந்தனைகள் ;

(ஈ) இயக்குநர் ஒருவரை, ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் சேவை செய்யப்பட்ட ஏதேனும் இணைப்பு அல்லது கொடுக்கப்பட்ட ஏதேனும் அனுமதி தொடர்பில் எவ்வகுப்பையோ அல்லது விவரணத்தையோ சேர்ந்த குறிப்பிட்ட ஆளொருவருக்கு அல்லது ஆட்களுக்குத் தகாத முந்துரிமையைக் காட்டுவதிலிருந்து அல்லது அவருக்கெதிராக அல்லது அவர்களுக்கெதிராகத் தகாத ஓரங் காட்டுதலிலிருந்து தடைசெய்யும் நிபந்தனைகள் ;

(உ) இயக்குநர் ஒருவரை, உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய முறையிலும், அத்தகைய நேரங்களிலும் ,ஏற்பாடு செய்யப்பட்ட சேவைகள், செய்யப்பட்ட இணைப்புக்கள் அல்லது கொடுக்கப்பட்ட அனுமதி என்பவற்றுக்கு ஏற்புடையனவாகவிருக்க வேண்டிய இறுப்பனவுகளையும் வேறு நியதி நிபந்தனைகளையும் குறித்துரைக்கின்ற அறிவித்தலொன்றை வெளியிடும்படி தேவைப்படுத்துகின்ற நிபந்தனைகள் ;

(ஊ) இயக்குநர் ஒருவரை, பட்டியல் தகவல், இறுப்புத் தகவல் விவரக்கொத்துச் சேவைகள், அத்துடன் விவரக்கொத்து விசாரணைச் சேவைகள் என்பனவற்றை உள்ளடக்கக்கூடிய போதிய, திருப்திகரமான செய்தித் தகவல் முறைமை, பயன்பாட்டாளருக்குக் கிடைக்கக்கூடியதாகவிருப்பதனை உறுதிப் படுத்தும்படி தேவைப்படுத்துகின்ற நிபந்தனைகள் ;

(எ) இயக்குநர் ஒருவரை—

(i) அவர் தமது தொலைத்தொடர்பு அமைப்பை, எந்தத் தேசிய ஒலிக்கடத்தல் திட்டத்துக்கு, சைகைகாட்டுதல் திட்டத்துக்கு, ஆளியிடுதல் திட்டத்துக்கு, இலக்கமிடுதல் திட்டத்துக்கு அத்துடன் இறுப்பனவுத் திட்டத்துக்கு உருவரைசெய்து பேணவேண்டுமோ அது தொடர்பாக அதிகாரியினால் விடுக்கப்பட்ட பணிப்புகளுக்கு இணங்கியொழுகும்படி தேவைப்படுத்துகின்ற நிபந்தனைகளும், மேற்கூறப்பட்ட திட்டங்கள் எவற்றிலிருந்தும் விலகும் பட்சத்தில் அதிகாரியிடமிருந்து அங்கீகாரத்தைத் தேவைப்படுத்துகின்ற நிபந்தனைகளும் ;

(ii) தேசிய, சர்வதேச வாகனப் போக்குவரத்தை மார்க்கமிடுவதில் அவரினால் பின்பற்றப்படும் வழக்காறுகள் பற்றி அதிகாரிக்கு அறிவிக்கும்படி தேவைப்படுத்துகின்ற நிபந்தனைகளும் ; அத்துடன்

(iii) நிலக்கீழ் கம்பி வடங்களை அல்லது மேந் நிலைக் கம்பிகளை நடாத்துவதினால் பாதிக்கப்படும் ஆட்களுக்கு நட்டஈட்டினை உறுதிப்படுத்தும்படி தேவைப்படுத்துகின்ற நிபந்தனைகளும் ;

(ஏ) இயக்குநர் ஒருவரை—

(i) உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய கருமங்கள் பற்றி அதிகாரியினால் விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகும்படி தேவைப்படுத்துகின்ற நிபந்தனைகள் ;

(ii) அதிகாரியின் சம்மதத்துடனன்றி உரிமத்தில் செய்யப்படவேண்டுமென அல்லது செய்யாது விடப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றவாறான அத்தகைய காரியங்களைச் செய்யும்படி அல்லது செய்யாதுவிடும்படி தேவைப்படுத்துகின்ற நிபந்தனைகள் ;

(iii) உரிமத்தில் குறித்துரைக்கப்படுகின்றவாறானதும் உரிமத்தின்கீழ் எழுகின்றவையுமான அத்தகைய பிரச்சினைகளை அதிகாரி தீர்மானிக்கப்படுவதற்காக ஆற்றுப்படுத்தும்படி தேவைப்படுத்துகின்ற நிபந்தனைகள் ;

(ஐ) உரிமம் தொடர்புபட்டுள்ள ஏதேனும் தொலைத்தொடர்புத் தொகுதிக்கு, உரிமத்தில் குறித்துரைக்கப்படுகின்றவாறான ஒரு விவரணத்தினவையான அத்தகைய வேறு தொலைத்தொடர்புத் தொகுதிகளையும் அத்தகைய உபகரணங்களையும் இணைக்கும்படி தேவைப்படுத்துகின்ற அல்லது அத்தகைய ஏதேனும் தொகுதிக்கு இணைப்பதனை அனுமதிக்கின்ற நிபந்தனைகள் ;

(ஒ) அவசரகாலங்களின்போது சேவையை மீளளிப்பதற்கான ஒரு திட்டத்தை அபிவிருத்திசெய்து வெளியிடும்படித் தேவைப்படுத்துகின்ற நிபந்தனைகள் ;

(ஒ) ஏற்றுக்கொள்ளத்தக்க எந்தப் பொருளாதாரக் கட்டளைகளுக்கிணங்க அதிகாரி, இயக்குனரொருவரினால் முன்மொழியப்பட்ட இறுப்புச் சரிக்கட்டுதல்களை அங்கீகரிக்க வேண்டுமோ அந்தப் பொருளாதாரக் கட்டளைகளைக் குறித்துரைக்கின்ற நிபந்தனைகள்.

(8) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று பொதுமக்கள் அறிந்துகொள்வதற்கு மிகச் சிறந்தமுறை என அதிகாரி கணித்துத் தீர்மானிக்கும் அத்தகைய முறையில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(9) உரிமமொன்றுக்கான வழங்குகைக்காக இப்பிரிவின்கீழ் கட்டணங்களாகச் செலுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் திரட்டு நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

17 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தின் திரிபு.

18. (1) அதிகாரி 17 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, அப்பிரிவின் கீழ் வழங்கப்பட்டஉரிமத்தின் ஏதேனும் ஒரு நிபந்தனையைத் திரிபுபடுத்தும்படி அமைச்சருக்கு விதப்புரை செய்யலாமென்பதுடன் அமைச்சரின் ஒருங்கிணைப்பைப் பெற்றதும் அத்தகைய திரிபுகளை முறையாகப் பயனுறுத்தலும் வேண்டும்.

(2) ஓர் உரிமத்தின் ஏதேனும் நிபந்தனையின் திரிபை (1) ஆம் உட்பிரிவின் கீழ் அமைச்சருக்கு விதப்புரை செய்யமுன்னர் அதிகாரி, அங்ஙனம் செய்தல் பொதுமக்களின் அக்கறைக்கானதென்று கருதினால், 17 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) ஆகிய பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட அதே விதத்தில் பகிரங்க அறிவித்தல் கொடுக்கலாம்.

(3) அதிகாரி, அத்தகைய பகிரங்க அறிவித்தலின் விளைவாக முறையாகச் செய்யப்பட்ட முறைப்பாடுகளை அல்லது ஆட்சேபனைகளைக் கவனத்திலெடுத்துப்பார்த்தலும் வேண்டும்.

உரிமமொன்றைப் பெறாது தொலைத் தொடர்பு தொகுதியை இயக்குதல் குற்றமாதல்.

19. (1) பதினேழாம் பிரிவின் கீழ் உரிமமொன்றைப் பெறாது இலங்கையில் தொலைத்தொடர்புத் தொகுதியொன்றை இயக்குகின்ற ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இயக்குநர் பின்வரும் சந்தர்ப்பங்களில் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்—

(அ) உரிமம் எந்த தொலைத்தொடர்புத் தொகுதி தொடர்பில் வழங்கப்பட்டதோ அத்தொகுதியுடன்—

(i) அவ்வாறு இணைக்கப்படுவதற்கு உரிமத்தினால் அதிகாரமளிக்கப்படாத வேறேதேனும் தொலைத் தொடர்புத் தொகுதி இணைக்கப்படுமிடத்து ; அல்லது

(ii) அவ்வாறு இணைக்கப்படுவதற்கு உரிமத்தினால் அதிகாரமளிக்கப்படாத ஏதேனும் தொலைத்தொடர்பு உபகரணம் இணைக்கப்படுமிடத்து ; அல்லது

(ஆ) அவ்வாறு ஏற்பாடுசெய்யப்படுவதற்கு உரிமத்தினால் அதிகாரமளிக்கப்படாத எவையேனும் தொலைத் தொடர்புச்சேவைகள் அத்தொகுதியின்மூலம் வழங்கப்படுமிடத்து.

உரிமமளித்தல் ஆயவற்றின் விதி விலக்குகள்.

20. (1) பதினேழாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் உள்ள ஏற்பாடுகளைப் பொருட்படுத்தாது, இப்பிரிவின் (2) ஆம் (3) ஆம் உட்பிரிவுகளுக்கமைவாக, பின்வருவனவற்றுக்கு உரிமமெதுவும் தேவைப்படுத்தப்படுதலாகாது—

(அ) ஒரு தொலைத்தொடர்புத் தொகுதியை இயக்குவதற்காக—

(i) அதன்மூலம் கடத்தப்படும் செய்திகளின் கடத்துகையில் சம்பந்தப்பட்ட ஒரே ஊடகம் ஒளியாகவுள்ள விடயத்திலும், அதன் மூலம் கடத்தப்படும் விடயங்களை கட்புலனுல் மட்டுமே பெறப்படக்கூடியதாக அல்லது தெரியக்கூடிய அவ்வாறு கடத்தப்படுகின்ற விடயத்து; அல்லது

(ii) அதன்கண் அடங்கியுள்ள எல்லா உபகரணங்களும் பின்வரும் இரண்டினுள் ஒன்றில் அமைந்திருக்கும் இன்னொரு தொலைத்தொடர்புத் தொகுதிக்கு இணைக்கப்படாதுள்ளவிடத்திலும்—

(அஅ) தனி இருப்பாட்சியிலுள்ள அல்லது தனி வாடகைக்குடியிருப்பான தனியொரு வளவிலும் அடுத்துள்ள எல்லையிலும் சொந்தக்காரனது அல்லது வாடகைக் குடியிருப்பாளரினது பூரண பாவிப்புக்கானதாகவும் அத்துடன் உரிமமளிக்கப்பட்ட வேறேதேனும் தொலைத் தொடர்புத் தொகுதியுடன் இணைக்கப்படாததுமானது ; அல்லது

(ஆஆ) ஒரு வாகனத்தில், கலத்தில், வானூர்தியில் அல்லது மீவானூர்தியில் அல்லது பொறிமுறையாக ஒன்றுகத் தொடுக்கப்பட்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வாகனங்களில், கலங்களில், வானூர்திகளில் அல்லது மீவானூர்திகளில் ; அல்லது

(iii) தனியாளொருவர் அத்தகைய தொகுதியை நடாத்துமிடத்து— அத்துடன்

(அஅ) அதன்கண் அடங்கியுள்ள எல்லா உபகரணங்களும் அவரது கட்டுப்பாட்டின்கீழ் இருக்குமிடத்து ; அத்துடன்

(ஆஆ) அதனுல் அனுப்பப்படும் எல்லாம் அவரது சொந்த வீட்டுப்பாவனை நோக்கங்களுக்காக மட்டுமே அனுப்பப்படுகின்றது.

(ஆ) இயக்குநரொருவரின் பகிரங்க ஆளியிடப்பட்ட அமைப்புக்கு அங்கீகரிக்கப்பட்ட முடிவிடச் சாதனத்தை இணைப்பதற்காக ; அல்லது

(இ) தொலைத்தொடர்புத் தொகுதியொன்று இன்னொரு தொலைத்தொடர்புத் தொகுதிக்கு இணைக்கப்படாதவிடத்தும் அதுதொடர்பில் பின்வரும் நிபந்தனைகள் திருப்தி செய்யப்படுமிடத்தும், அத்தொலைத்தொடர்புத் தொகு

தியை நடாத்துகின்ற தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற ஆளொருவருக்கு அத்தொழிலின் நோக்கங்களுக்காக ; அந்நிபந்தனைகளாவன—

(i) தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற ஆள் தவிர்ந்த ஆளெவரும் அத்தொகுதியில் அடங்கியுள்ள உபகரணங்களின் கட்டுப்பாட்டில் சம்பந்தப்பட்டிருத்தலாகாது ;

(ii) அத்தொகுதியினால் அனுப்பப்படும் ஒலிகள் அல்லது கட்புல விம்பங்கள், தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற ஆள் அல்லது அத்தொழில் நடாத்துவதில் ஈடுபட்டுள்ள அவரது எவரேனும் ஊழியர்கள் தவிர்ந்த வேறு எவரேனுமாட்களினால் அவை கேட்கப்படும் அல்லது பார்க்கப்படும் நோக்கத்துக்காக அவை அவ்வாறு அனுப்பப்படுதலாகாது ;

(iii) தொகுதிமூலம் தெரிவிக்கப்படும் தகவல்கள் தொழிலைக் கொண்டுநடாத்தும் ஆளுக்கு அத்தொழில் கொண்டுநடாத்தவென அல்லது அத்தகைய தொழிற்போக்கில் பயன்படுத்தப்படும் அவரது கட்டுப்பாட்டிலுள்ள அத்தகைய தொகுதியின் உபகரணத்தால் பெறப்படுவதற்கென அல்லது அனுப்பவென அவரால் ஈடுபடுத்தப்பட்ட எவரேனும் ஊழியருக்கு மாத்திரம் தெரிவிக்கப்படுதல் ;

(iv) அத்தகைய தொகுதியினால் அனுப்பப்படும் தகவல்கள் அத்தொழிலின்போதல்லாது வேறுவகையாகப் பயன்படுத்தப்படும் எந்திரத்தொகுதியை அல்லது உபகரணத்தைத் தூண்டும் அல்லது கட்டுப்படுத்தும் நோக்கத்துக்காக அனுப்பப்படுதலாகாது ; அத்துடன்

(v) "தொலைத்தொடர்புத் தொகுதி" என்ற சொல்லமைப்பிற்கான வரைவிலக்கணதுக்குட்படுகின்ற எதுவும், தொலைத்தொடர்புச் சேவையளித்தல் என்ற வகையாக அத்தொகுதியினால் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற ஆள் தவிர்ந்த வேறெவரேனும் ஆளுக்கு அனுப்பப்படுதலாகாது; அல்லது

(ஈ) பொலிசாரினால், ஆயுதந்தாங்கிய படையினரினால், அத்துடன் தேசியப் பாதுகாப்புக்கென அரசினால் நேரடியாகத் தொழிலுக்கமர்த்தப்பட்ட வேறெவரேனும் சேவையினரினால், அவர்களது அலுவலக முறையான கடமைகளைப் புரிகையில், தொலைத்தொடர்புத் தொகுதிகள் அல்லது தொலைத்தொடர்பு உபகரணங்கள் பயன்படுத்தப்படுவதற்காக ;

ஆயின், எவ்வாறாயினும், அவர்கள், அதிகாரியினால் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய தொழினுட்பத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும் ;

(உ) அரசின் சேவையில் உள்ள ஏதேனும் போர்க்கப்பலில் அல்லது வானூர்தியில் தொலைத்தொடர்புத் தொகுதிகளை அல்லது உபகரணங்களைப் பயன்படுத்துவதற்காக ; அல்லது

(ஊ) இலங்கைக்கு வெளியில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் வெளிநாட்டுக் குடியியல் வானூர்தியில் உள்ள ஏதேனும் தொலைத்தொடர்புத் தொகுதிக்கும் அல்லது உபகரணத்துக்கும் அத்தொகுதியை அல்லது உபகரணத்தைப் பயன்படுத்துகின்ற வானூர்தியின் செலுத்துனர் குழாம் உறுப்பினர்களுக்கும் வானூர்திகளில் அத்தகைய தொகுதியை அல்லது உபகரணத்தை நிறுவுதல் அல்லது பயன்படுத்துதல் பற்றி அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சருவதேசச் சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க விசேடமாக உரிமமளிக்கப்பட்டிருப்பின், அத்தகைய தொகுதியை அல்லது உபகரணத்தைப் பயன்படுத்துவதற்காக,

(2) (அ) ஓராம் உட்பிரிவில் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தொலைத்தொடர்புத் தொகுதியொன்று தொகுதியை இயக்கும் ஆட்களினால் இருப்பாட்சிகொள்ளப்பட்ட வளவுகளுக்கு நேரொத்ததாகவுள்ள ஒரு பிரதேசத்தின் எல்லைகளுக்கப்பால் நீடித்திருக்குமிடத்து, இச்சட்டம் வலுவுக்கு வருந்தேதியன்று அத்தகையதொரு தொகுதியை இயக்குகின்ற அல்லது அத்தேதியன்று அல்லது அதன்பின்னர் அத்தகையதொரு தொகுதியை இயக்குவதற்கு உத்தேசிக்கின்ற ஆளொவ்வொருவரும் அத்தொகுதியை இயக்குவதற்கான நிபந்தனையொன்றாக :

(i) இயக்கப்பட்டுவருகின்ற, அல்லது இயக்கப்பட உத்தேசிக்கப்பட்ட தொலைத்தொடர்புத் தொகுதியின் வகை, தொகுதியின் அமைவிடம்; அத்துடன் அதன் எல்லைகள் என்பவற்றுக்காக அதிகாரியிடமிருந்து உரிமமொன்றைப் பெறுதல் வேண்டும் ;

(ii) அத்தகைய தொகுதிதொடர்பில் இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுடன் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளுடன் அல்லது விதிகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) வின் ஏற்பாடுகளுக்கு முரணாகத் தொலைத்தொடர்புத் தொகுதியொன்றை இயக்குகின்ற ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், அத்தகையதொரு தொகுதியை இயக்குவதினின்றும் அதிகாரியினால் தடைசெய்யவும்படலாம்.

(3) (அ) இருபதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) (iii) என்னும் பந்தியில் அல்லது (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தொலைத்தொடர்புத் தொகுதியை இயக்குகின்ற, ஆளுக்கும் இயக்குநரொருவருக்குமிடையே அவர்களின் தொலைத்தொடர்புத் தொகுதிகளின் ஒன்றோடொன்றின் இணைப்புக்காக உடன்பாடுள்ளவிடத்து, ஒன்றோடொன்றின் இணைப்புக்குமுன்னர் அத்தகைய ஆட்கள், ஒன்றோடொன்றின் இணைப்புக்காக அதிகாரியிடமிருந்து உரிமமொன்றைப் பெறுதல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) வின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளொருவர், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தொகுதியைத் தொடர்ந்து இயக்குவதினின்றும் அதிகாரியினால் தடைசெய்யவும் படலாம்.

(4) இயக்குநரொருவர், அவர் அவ்வாறு விரும்பின், இயக்குதல்சார் திறமையினதும் தொழினுட்பத் தரங்களினதும் நலன் கருதி (3) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஒன்றேடொன்றின் இணைப்பைக் கண்காணிக்கும்படி அதிகாரிக்கு வேண்டுகோள் விடுக்கலாமென்பதுடன், அதிகாரி, அவ்வாறு வேண்டுகோள், விடுக்கப்படுமிடத்து, அத்தகைய வேண்டுகோளுக்கு இணங்கியொழுகுவதற்காகத் தேதான வழிவகைகளை எடுத்தலும் வேண்டும்.

**தொலைத்தொடர்பு உபகரணங்களின் கட்டுப்பாடு, ஒழுங்காக்கல், உற்பத்தி, இறக்குமதி முதலியன.**

21. (1) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் அந்நோக்கத்துக்காக அதிகாரியினால் வழங்கப்பட்ட உரிமத்தின் அதிகாரத்தின் கீழன்றி, ஆள் எவரும்—

(அ) ஏதேனும் தொலைத்தொடர்பு உபகரணத்தை வர்த்தகரீதியாகத் தயாரித்தல், இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல், விற்பனைக்காக வைத்திருத்தல், கையாளுதல், கைமாற்றுதல், வாடகைக்கு விடல், குத்தகைக்கு விடல், செய்து காண்பித்தல், பேணுதல் அல்லது பழுதுபார்த்தல்; அல்லது,

(ஆ) இலங்கையின், ஏதேனும் வளவுகளுள் அல்லது வாகனத்துள் அல்லது அதன ஆள்புல கடற்பரப்பின் ஏதேனும் ஒரு பாகத்தில் அல்லது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கப்பலில் அல்லது வானூர்தியில் (இருபதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் உபகரணமாக இல்லாத) ஏதேனும் தொலைத்தொடர்பு உபகரணத்தை நிறுவுதல், தாபித்தல், தொழிற்படுத்தல் அல்லது தொழிற்படுத்தச் செய்வித்தல்,

ஆகாது.

இப்பிரிவின் கீழ், உரிமத்துக்காகச் செய்யப்படும் விண்ணப்பமொவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அதிகாரிக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஏதேனும் நோக்கத்துக்காக அதிகாரியினால் வழங்கப்படும் உரிமம் ஒவ்வொன்றும்—

(அ) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்துக்காக அல்லது செயற்பாட்டுக்காக அல்லது அத்தகைய நோக்கங்களினதும், செயற்பாடுகளினதும் சேர்க்கைக்கானதாயிருத்தல் வேண்டும்;

(ஆ) விதித்துரைக்கப்பட்ட படிவத்திலும் அதிகாரியினால் அல்லது அதற்கென அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அலுவலரால் கையொப்பமிடப்பட்டதாயும் இருத்தல் வேண்டும்;

(இ) விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துவதன் மீது வழங்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) அதிகாரியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் அமைந்ததாதல் வேண்டும்.

(3) அதிகாரி எந்நேரத்திலும், அப்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தை, அது எந்த நிபந்தனைகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் அமைந்தனவானதோ அந்த ஏதேனும் நிபந்தனைகள் அல்லது மட்டுப்பாடுகள் மீறப்பட்டதன் காரணமாக அல்லது அதன்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணப்பெறுமதியைச் செலுத்தத் தவறியிருக்கும் பட்சத்தில் அல்லது உரிமம் பெறுநர், அதுதொடர்பில் இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியுடன் இணங்கியொழுகத் தவறுமிடத்து, இல்லாதொழித்து, முடிவுறுத்தலாம்.

(4) அதிகாரி,

(அ) ஓராம் உட்பிரிவின் கீழ் உரிமமொன்றுக்காகச் செய்யப்பட்ட விண்ணப்பத்தை நிராகரிக்குமிடத்து; அல்லது

(ஆ) மூன்றாம் உட்பிரிவின் கீழ் உரிமமொன்றை இல்லாதொழிக்குமிடத்து

விண்ணப்பகாரர் அல்லது உரிமம் பெறுநர், விடயத்துக்கேற்ப அத்தகைய நிராகரித்தல் அல்லது இல்லாதொழித்தலுக்கு எதிராக, அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு, அதிகாரியின் முடிவு அவருக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் அத்தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் மேன்முறையீடு செய்யலாம். அவர் அத்தகைய மேன் முறையீட்டில், அதிகாரியின் முடிவை உறுதிப்படுத்தலாம், அல்லது தள்ளுபடி செய்யலாம்.

(5) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறும் ஒவ்வொருவரும், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் அத்தகைய குற்றப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து, மூன்று மாதங்களை விஞ்சாத ஒரு காலப் பகுதிக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கும் ஆளாதலும் வேண்டும்.

ஏதேனும் வானொலி அலைஅதிர் வெண்ணைப்பயன் படுத்துவதற்கான உரிமம்.

22. (1) ஆள் எவரும், இலங்கையில் ஏதேனும் வானொலி அலை அதிர்வெண்ணை; இப்பிரிவின்கீழ் அந்நோக்கத்துக்காக அதிகாரியினால் வழங்கப்பட்ட விதித்துரைக்கப்பட்ட விவரணத்திலுலான உரிமத்தின் அதிகாரத்தின் கீழன்றி பயன்படுத்தல் ஆகாது. இரண்டாம் உட்பிரிவின் கீழான உரிமமொன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அதிகாரிக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஏதேனும் நோக்கத்துக்காக அதிகாரியினால் வழங்கப்படும் உரிமம் ஒவ்வொன்றும்—

(அ) விதித்துரைக்கப்பட்ட படிவத்திலும் அதிகாரியினால் அல்லது அவரின் சார்பாக அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அலுவலரால் கையொப்பமிடப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்;

(ஆ) விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துவதன்மீது வழங்கப்படுதல் வேண்டும்;

(இ) அத்தகைய ஏதேனும் நிபந்தனைகளையும் மட்டுப்பாடுகளையும் மீறும் பட்சத்தில் விதித்துரைக்கப்பட்ட அலை அதிர்வெண் சாதனத்தைப் பயன்படுத்தல் தடைசெய்யப்படுதலை உள்ளடக்கக்கூடிய விதித்துரைக்கப்படும் நிபந்தனைகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் அமைந்ததாதலும் வேண்டும்.

(3) அதிகாரி, எந்நேரத்திலும், இப்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமத்தை, அது எந்த நிபந்தனைகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் அமைந்ததோ அந்த நிபந்தனைகளும் மட்டுப்பாடுகளும் மீறப்படுமிடத்து அல்லது அதன்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணப்பெறுமதியைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் அல்லது அது தொடர்பில் அப்போதைக்கு நடைமுறையில் உள்ள இச்சட்டத்தின் கீழான ஏதேனும் ஒழுங்குவிதியுடன் உரிமம் பெறுநர் இணங்கியொழுகத் தவறுமிடத்து, இல்லாதொழித்து, முடிவுறுத்தலாம்.

(4) அதிகாரி—

(அ) ஓராம் உட்பிரிவின்கீழ், உரிமத்துக்காகச் செய்யப்பட்ட விண்ணப்பத்தை நிராகரிக்குமிடத்து ; அல்லது

(ஆ) மூன்றும் உட்பிரிவின் கீழ் உரிமமொன்றை இல்லாதொழிக்குமிடத்து

விண்ணப்பகாரர் அல்லது உரிமம் பெறுநர் விடயத்துக்கேற்ப அத்தகைய நிராகரித்தலுக்கு அல்லது இல்லாதொழிப்புக்கு எதிராக அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அதிகாரியின் முடிவு அவருக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் அத்தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் மேன்முறையீடு செய்யலாம். அவர் அத்தகைய மேன்முறையீட்டில், அதிகாரியின் முடிவை உறுதிப்படுத்தலாம் அல்லது தள்ளுபடி செய்யலாம்.

(5) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகும் வண்ணம் வானொலி அதிர்வெண்ணைப் பயன்படுத்தும் ஒருவர் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

## பாகம் III

### தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் ஆதன உரிமைகளையும் பொறுப்புக்களையும் கைமாற்றுதல்.

தொலைத்தொடர்புத்திணைக்களத்துக்குரிய ஆதனத்தை இலங்கை தொலைத்தொடர் என்னும் பெயர்குறித்து நியமிக்கப்படும்கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்குதல்.

23. (1) இச்சட்டத்தில் "கைமாற்றல் தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியதுமான அத்தகைய நாளன்று, (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட உடன்படிக்கையினால் தவிர்க்கப்பட்டவை தவிர கைமாற்றல் தேதிக்கு நேர்முன்னர் தொலைத்தொடர்புத் திணைக்களம் உரித்துடையதாகவிருந்த அல்லது அமைந்ததாகவிருந்த எல்லா ஆதன உரிமைகளும் பொறுப்புக்களும், 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில் கூட்டுத் தாபனங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1990, பெப்பிரவரி 6 ஆந் தேதிய 596/11 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கூட்டிணைப்புக் கட்டளையொன்றினால் தாபிக்கப்பட்ட (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக்குறிப்பீடு செய்யப்படும் "இலங்கை தொலைதொடர்" கூட்டுத் தாபனம் என்னும் பெயரிடப்பட்ட) கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) கைமாற்றல் தேதிக்குமுன்னர் எந்நேரத்திலேனும் அமைச்சரும் கூட்டுத்தாபனமும் உடன்படிக்கையிற் குறித்துரைக்கப்பட்ட அத்தேதியின் பின்னர் தொலைத்தொடர்புத் திணைக்களத்திடம் தொடர்ந்திருக்க வேண்டிய ஆதன உரிமைகளும் பொறுப்புக்களும் தொடர்பாக எழுத்தில் உடன்படலாம்.

ஒப்பந்தங்கள் உரிமைகள் முதலியனவற்றைக் கைமாற்றுதலும் உரித்தாக்குதலும்.

24. இருபத்திமூன்றும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட உடன்படிக்கையினால் வேறுவகையில் தவிர்க்கப்பட்டவாறு தவிர, கைமாற்றல் தேதியிலிருந்து

(அ) தொலைத்தொடர்புத் திணைக்களத்தினால், திணைக்களத்துடன் அல்லது திணைக்களத்துக்காகச் செய்துகொள்ளப்பட்டனவும் கைமாற்றல் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளனவுமான எல்லா ஒப்பந்தங்களும், குத்தகைகளும் அல்லது வாடகைக்குடியிருப்பு உடன்படிக்கைகளும், அத்தேதியிலிருந்து கூட்டுத்தாபனத்தினால், கூட்டுத்தாபனத்துடன் அல்லது கூட்டுத்தாபனத்துக்காகச் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், குத்தகைகள் அல்லது வாடகைக்குடியிருப்பு உடன்படிக்கைகள் எனக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) கைமாற்றல் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ள, தொலைத்தொடர்புத் திணைக்களத்தில் எல்லா அக்கறைகளும் உரிமைகளும், வசதியுரிமைகளும் கடப்பாடுகளும், கடன்களும், பொறுப்புக்களும், அத்தேதியிலிருந்து கூட்டுத்தாபனத்தின் அக்கறைகள், உரிமைகள் வசதியுரிமைகள் கடப்பாடுகள், கடன்கள், பொறுப்புக்கள் என்பனவாகக் கருதப்படுதல் வேண்டும்;

(இ) கைமாற்றல் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ள, தொலைத்தொடர்புத் திணைக்களத்தினால் நிறுவப்பட்டுப் பேணப்படுகின்ற அல்லது நிறுவப்பட்டுப் பேணப்படுகின்ற நடைமுறையில் இருக்கின்ற, அல்லது அவ்வாறு நிறுவப்பட்டுக் கொண்டிருக்கின்ற அல்லது பேணப்பட்டுக் கொண்டிருக்கின்ற நடைமுறையில் இருக்கின்ற எல்லா நிறுவுகைகளும் பொறித் தொகுதியும் சாதனமும், வேறு ஆதனமும் அத்துடன் தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் தொலைத் தொடர்புத் சேவையைப் பேணுவதற்கு அல்லது வழங்குவதற்குத் தேவைப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட எத்தகைய விவரணத்தவையுமான எல்லாக் விடயங்களும் பொருள்களும் அத்தேதியிலிருந்து, கூட்டுத்தாபனத்துக்குக் கைமாற்றப்பட்டு உரித்தாக்கப்படுதல் வேண்டும்;

(ஈ) கூட்டுத்தாபனத்துக்கு இச்சட்டத்தின்கீழ் கைமாற்றப்பட்ட தொலைத்தொடர்புத் தொகுதி தொடர்பில் அல்லது அதற்காக அல்லது அதன் கணக்கால் கைமாற்றல் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று அரசாங்கத்துக்கு வருமதியாகவும் கொடுக்குமதியாகவுமிருந்து, அல்லது அத்தகைய கைமாற்றல் நடைபெறுதிருப்பின் கைமாற்றல் தேதிக்குப்பின்னர் அரசாங்கத்துக்கு வருமதியாகவிருந்திருக்கும் எவையேனும் பணங்களை அறவிடுவதற்கு அல்லது பெறுவதற்குக் கூட்டுத்தாபனம் உரிமையுடையதாதல் வேண்டும்.

**கைமாற்றலானது அசைவற்ற ஆதனத்துக்கான முழு உரித்தையும் கூட்டுத்தாபனத்துக்குக் கொடுத்தல் வேண்டும்.**

25. வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், 23 ஆம் பிரிவின் பயனைக்கொண்டு ஏதேனும் அசைவற்ற ஆதனத்தை அல்லது அதன்கண் உள்ள ஏதேனும் அக்கறையை உரித்தாக்கல், எல்லா நோக்கங்களுக்காகவும், மேலும் எண்பிப்பின்றியும் பதிவுக்கான ஏதேனும் தேவைப்பாடின்றியும் அத்தகைய எல்லா அசைவற்ற ஆதனத்தினதும் அல்லது அதன் கண் உள்ள ஏதேனும் அக்கறையினதும் முழு உரித்தையும் கூட்டுத்தாபனத்துக்கும் கொடுத்தல் வேண்டும்.

**மூன்றும் திறத்தவர்களின் உரிமைகள் பங்கப்படுத்தப்படலாகாது.**

26. தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் எல்லா ஆதன உரிமைகளையும் பொறுப்புக்களையும் 23 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட உடன்படிக்கையினால் தவிர்க்கப்பட்டவை தவிர கூட்டுத்தாபனத்துக்கு கைமாற்றுதலானது, கைமாற்றல் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்றுள்ள ஏதேனும் ஒப்பந்தத்துக்கான அல்லது உடன்படிக்கைக்கான மூன்றும் திறத்தவரின் உரிமைகளைப் பங்கமான முறையில் எவ்வகையினும் பாதிப்பதாகக் கருதப்படுதலாகாது என்பதுடன் அத்தகைய ஒவ்வோர் ஒப்பந்தமும் உடன்படிக்கையும் அத்தகைய ஒவ்வோர் ஒப்பந்தத்திலும் அல்லது உடன்படிக்கையிலும் தொலைத்தொடர்புத் திணைக்களம் பற்றிய ஒவ்வொரு குறிப்பீடும் கூட்டுத்தாபனத்துக்கான குறிப்பீடொன்று என்றுற்போன்று கைமாற்றல் தேதிக்குப் பின்னர் கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதற்கெதிராகச் செல்லுபடியுடையதாதலும் வலுவுறுத்தப்படற்பாலதாதலும் வேண்டும்.

இதனைக்குமுன்னர் தொலைத் தொடர்புப் பணிப்பாளரினால் பிரயோகிப்பட்ட, புரியப்பட்ட நிறைவேற்றப்பட்ட எல்லா ஒழுங்காக்கல் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் அதிகாரி பிரயோகித்தல்.

27. கைமாற்றத் தேதியிலிருந்தும் அதன் பின்னரும்—

(அ) அதிகாரி, ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் தொலைத்தொடர்புப் பணிப்பாளருக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை பணியை, கடமையைப் பிரயோகித்தல், புரிதல், நிறைவேற்றுதல் வேண்டுமென்பதுடன், அத்தேதியிலிருந்தும் அதன்பின்னரும் தொலைதொடர்புப் பணிப்பாளர், மேற்கூறப்பட்ட எவையேனும் அல்லது எல்லா தத்துவங்களை, பணிகளை அல்லது கடமைகளைப் பிரயோகித்தலிலிருந்து புரிவதிலிருந்து அல்லது நிறைவேற்றுதலிருந்து இல்லாதொழிதலும் வேண்டும்.

(ஆ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலில் அல்லது வேறு ஆவணத்தில் அல்லது படிவத்தில் தொலைத்தொடர்புப் பணிப்பாளர் என்னும் சொல்லமைப்பு, (பெயர் வழியாக, பதவி வழியாக, முழுமையாக, அல்லது "பணிப்பாளர்" என்பதன் சுருக்கப்பட்ட பதவிவழியாக) குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் "தொலைத்தொடர்புப் பணிப்பாளர்" என்ற சொற்களுக்காக, 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கைத் தொலைத்தொடர்புச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட "தொலைத்தொடர்புப் பணிப்பாளர் தலைமையதிபதி" என்ற சொற்கள் பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

## தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் பகிரங்க அலுவலர்கள் கூட்டுத்தாபனத்தின் ஊழியத்துக்கமர்த்தப்படுதல்.

திணைக்களத்தின் பகிரங்க அலுவலர்களினால் கைமாற்றத் தேதிக்குமுன்னர் கொடுக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தல்.

28. அரச, கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தில் எது எப்படியிருப்பினும், தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் அலுவலர்கள் கூட்டுத்தாபனத்தில் ஊழியத்துக்கமர்த்தப்படுவது தொடர்பில் பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாக்கப்படுதல் வேண்டும் :—

(அ) இலங்கை எந்திரவியற் சேவையிலுள்ள அலுவலரொருவர் தவிர்ந்தவரும், அரசாங்கத்தின் இடமாற்றத்தகு சேவையிலுள்ள அத்தகைய எவரேனுமலுவலராகஇராதவருமான தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் பகிரங்க அலுவலர் ஒவ்வொருவரும் கைமாற்றல் தேதிக்குமுன்னர், அத்தகைய அலுவலர் கைமாற்றல் தேதியன்று பின்வருவனவற்றைச் செய்வதற்கு உத்தேசிக்கின்றாரென எழுத்திலான அறிவித்தலைத் தொலைத்தொடர்புப் பணிப்பாளருக்குக் கொடுத்தல் வேண்டும் :—

(i) திணைக்களத்தின் பகிரங்க அலுவலராகப் பதவியில் தொடர்ந்திருத்தல் ; அல்லது

(ii) தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் ஒய்வூதியமுடைய அலுவலராகவிருந்து அவர் அத்தேதியன்று பத்தாண்டுகளுக்குக் குறையாத ஒய்வூதியமுடைய சேவையைக் கொண்டிருப்பின், பகிரங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற கூட்டுத்தாபனத்தின் ஊழியரொருவராதல்; அல்லது

(iii) தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் ஒய்வூதியமுடைய அலுவலராகவிருந்து அவர் அத்தேதியன்று பத்தாண்டுகளுக்குக் குறைந்த ஒய்வூதியமுடைய சேவையைக் கொண்டிருப்பின், பகிரங்க சேவையை விட்டுநீங்கிக் கூட்டுதாபனத்தின் ஊழியரொருவராதல்; அல்லது

(iv) பகிரங்க சேவைச் சகாயநிதியக் கட்டளைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவைச்சகாய நிதியத்திற்கு அவர் உதவுதொகை செலுத்துநராகவிருப்பின், பகிரங்க சேவையை விட்டுநீங்கிக் கூட்டுத்தாபனத்தின் ஊழியரொருவராதல்; அல்லது

(v) ஒய்வுபெற்ற அல்லது பகிரங்க சேவையை விட்டுநீங்கிக் கூட்டுத்தாபனத்தின் ஊழியரொருவராகவிருத்தல்;

(ஆ) கைமாற்றல் தேதிக்குமுன்னர், தொலைத்தொடர்புப் பணிப்பாளருக்குத் திணைக்களத்தின் பகிரங்க அலுவலரொருவரினால் (அ) என்னும் பந்தியின் கீழ் கொடுக்கப்படும் அறிவித்தல் இறுதியானதாதல் வேண்டும்.

28 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் கொடாமையின் அல்லது 28அ (i) என்னும் பிரிவின் கீழ் அத்தகைய அறிவித்தல் கொடுக்கின்றமையின் பயன்.

29. (1) கைமாற்றல் தேதிக்குமுன்னர் 28 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் உபபந்திகள் (ii), (iii), (iv) அல்லது (v) இன் கீழ் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தலைக் கொடுக்காத, அல்லது பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) என்னும் உட்பந்தியின் கீழ் அத்தகைய அறிவித்தலைக் கொடுக்கின்ற தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் எவரேனும் பகிரங்க அலுவலர், அத்தேதியன்றும் அதன்பின்னரும் தொலைத் தொடர்புத் திணைக்களத்தின் பகிரங்க அலுவலராகப் பதவியில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட பகிரங்க அலுவலரொருவர் அவர் அத்தகைய பதவியில் தொடர்ந்திருக்கும் வரை அத்தகை அலுவலரென்றதன்மையில் கூட்டுத்தாபனத்துக்காகவும் அதன் சார்பிலும் வேலையை நிறைவேற்றுதல் வேண்டும்; அத்துடன் அவர், அத்தகைய அலுவலரென்ற தன்மையில் தொலைத் தொடர்புத் திணைக்களத்துக்காக அவர் வேலைசெய்கையில் உரித்துடையவராகவிருந்த அதேசேவை நிபந்தனைகளுக்குத் தகவுடையவராதல் வேண்டுமென்பதுடன், வேறு எவரேனும் பகிரங்க அலுவலரைப் போன்ற அத்தகைய ஒழுக்காற்றுக்கட்டுப்பாடுகளுக்கமைவானவராகவுமிருத்தலும் வேண்டும்.

(3) தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் எவரேனும் பகிரங்க அலுவலர் கைமாற்றல் தேதியன்றும் அதன் பின்னரும் அத்தகைய அலுவலராகக் தொடர்ந்திருந்து அத்தகைய அலுவலர் என்ற தகைமையில் வேலையை நிறைவேற்றுமிடத்து, கூட்டுத்தாபனம், அத்தகைய அலுவலர் தொடர்பில் அரசாங்கத்தி

ளுல் செலுத்தப்படற்பாலதான ஒய்வூதியம் அல்லது சகாயநிதி ஒப்பப்பணங்கள் உள்ளடக்கப்பட்டதான வேறு செலவுகளையும் அவரது சம்பளத்தையும் மேவுவதற்குப் போதுமானதும் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் தீர்மானிக் கப்படக் கூடியதுமான அத்தகைய தொகையை விஞ்சாத ஒரு தொகையை, கூட்டுத்தாபனத்தின் நிதியிலிருந்து திரட்டு நிதி யத்தில் வரவு வைக்கும்படி, திறைசேரியின் பிரதிச் செயலாள ருக்குச் செலுத்துதல் வேண்டும்.

28 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii) முதல் (v) வரையிலான உட்பந்திகளுள் எவற்றினதும் கீழ் கொடுக்கப்பட்ட றிவித்தலின் பயன்.

30. (1) கைமாறறல் தேதிக்குமுன்னர் 28 ஆம் பிரிவின (அ) என்னும் பந்தியின் (ii), (iii), (iv) அல்லது (v) என்னும் உட்பந்திகளின் கீழ் அறிவித்தல் கொடுக்கின்ற தொலைத்தொடர் புத் திணைக்களத்தின் எவரேனும் பகிரங்க அலுவலர்—

(அ) அத்தகைய அறிவித்தல் அப்பந்தியின் (ii) என்னும் உப் பந்தியின்கீழ் அவரினுல் அவ்வாறு கொடுக்கப்படுமிடத்து கைமாற்றல் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் கூட்டுத் தாபனத்தின் ஊழியரொருவராதல் வேண்டுமென்பது டன், 31 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தேதி யன்று பதவி இல்லாதாக்குகை என்ற ஏதுவின் மீது பகிரங்க சேவையிலிருந்து அவர் ஓய்வுபெற்றிருப்பின் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கக்கூடியதான ஓய்வூதியங் கள்மீதான குறிப்புகளின்கீழான அத்தகைய ஓய்வூதி யத்துக்குத் தகவுடையவராதலும் வேண்டும் ; அல்லது

(ஆ) அத்தகைய அறிவித்தல் அப்பந்தியின் (iii) என்னும் உட்பந்தியின்கீழ் அவரினுல் அவ்வாறு கொடுக்கப்படு மிடத்து இடமாற்றல் தேதியிலிருந்தும் அதன்பின்ன ரும் கூட்டுத்தாபனத்தின் ஊழியரொருவராதல் வேண்டு மென்பதுடன், அத்தேதியன்று பகிரங்க சேவையை விட்டுநீங்கியவராகக் கருதப்படுதலும் வேண்டும் ; அத் துடன் 31 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பதவி இல்லாதாக்குகை என்ற ஏதுவின்மீது பகிரங்க சேவையை அவர் விட்டுநீங்கியிருப்பின் அவருக்கு அளிக்கப்பட்டிருக் கக்கூடியதான ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின் கீழான அத்தகைய அளிப்புக்குத் தகவுடையவராதல் வேண்டும் ; அல்லது

(இ) அத்தகைய அறிவித்தல் அப்பந்தியின் (iv) என்னும் உட் பந்தியின்கீழ் அவரினுல் அவ்வாறு கொடுக்கப்படுமிடத்து இடமாற்றல் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் கூட்டுத் தாபனத்தின் ஊழியரொருவராதல் வேண்டுமென்பது டன், பதவிநீக்கத்தினுல் அல்லாது வேறுவகையாக அர சாங்கத்தின் சம்மதத்துடன் ஒப்பந்தமொன்றை முடிவு றுத்தியதன்மேல் அத்தேதியில் அரசாங்கத்தின் சேவை யை விட்டுநீங்கியவரெனப் பகிரங்கசேவைச் சகாய நிதியக் கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கருதப்படுதலும் வேண்டும்.

(ஈ) அத்தகைய அறிவித்தல் அப்பந்தியின் (v) என்னும் உப்பந்தியின்கீழ் அவரினால் அவ்வாறு கொடுக்கப்படு மிடத்து அத்துடன்—

(i) அவர் அப்பந்தியின் (ii) என்னும் உப்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட வகுப்பினரான அல்லது விவரணத்தினரான பகிரங்க அலுவலராக விருப்பின், கைமாற்றல் தேதியன்று பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றவராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தேதியன்று பதவி இல்லாதாக்குகை என்ற ஏதுவின்மீது அவர் பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றிருப்பின் அவருக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடியதான ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின் கீழான அத்தகைய ஓய்வூதியத்துக்குத் தகவுடையவராதலும் வேண்டும் ; அல்லது

(ii) அவர் அப்பிரிவின் (iii) என்னும் உப்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய வகுப்பினரான அல்லது விவரணத்தினரான பகிரங்க அலுவலரொருவராகவிருப்பின், இடமாற்றல் தேதியன்று பகிரங்க சேவையை விட்டுநீங்கியவராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தேதியன்று பதவி இல்லாதாக்குகை என்ற ஏதுவின்மீது அவர் பகிரங்க சேவையை விட்டுநீங்கியிருப்பின் அவருக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடியதான ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின்கீழான அத்தகைய அளிப்பொன்றுக்குத் தகவுடையவராதலும் வேண்டும் ; அல்லது

(iii) அவர், அப்பந்தியின் (iv) என்னும் உப்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட வகுப்பினரான அல்லது விவரணத்தினரான எவரேனும் பகிரங்க அலுவலராக விருப்பின், பதவிநீக்கத்தினால் அல்லாது வேறுவகையாக அரசாங்கத்தின் சம்மதத்துடன் ஒப்பந்த மொன்றை முடிவுறுத்தியதன் மேல் அத்தேதியில் அரசாங்க சேவையை விட்டு நீங்கியவரெனப் பகிரங்க சேவைச் சகாய நிதியக் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உப்பிரிவின் ஏற்பாடுகளுக்கும் 29 ஆம் பிரிவின் (1) ஆம் உப்பிரிவின் ஏற்பாடுகளுக்கும் இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை இருக்கும்பட்சத்தில், அவ்வுப்பிரிவுகளின், ஏற்பாடுகள் அத்தகைய முரண்பாட்டின் அல்லது ஒவ்வாமையின் அளவுக்கு அத்தகைய வேறு ஏற்பாடுகளிலும் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் குறித்த சில ஊழியர்களுக்கு ஏற்புடையனவான விசேட ஏற்பாடுகள்.**

**31.** முப்பதாம் பிரிவின் ஏற்பாடுகளினது நடைமுறையின் பயனைக் கொண்டு இடமாற்றல் தேதியன்று கூட்டுத்தாபனத்தின் எவரேனும் ஊழியராகவந்த அத்தகைய ஊழியர் ஒருவருக்கும், அவர் தொடர்பாகவும் பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும் :—

(அ) அத்தகைய ஊழியர், அத்தகைய ஊழியரினாலும் கூட்டுத்தாபனத்தினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக் கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது கூட்டுத்தாபனத்தினால் தொழிலுக்கமர்த்தப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய நியதி நிபந்தனைகள் அத்தகைய ஊழியர் எந்த நியதி நிபந்தனையின்மீது திணைக்களத்தில் முன்னர் தொழிலுக்கமர்த்தப்பட்டாரோ அந்த நியதி நிபந்தனைகளைப் பார்க்க அனுகூலம் குறைந்தவையாகவிருத்தலாகாது.

(ஆ) இடமாற்றல் தேதியன்று அத்தகைய ஊழியர் ஓய்வூதியமுடையதென வெளிப்படுத்தப்பட்ட பதவியொன்றை வகிக்கின்றவரும் பத்தாண்டுகளுக்குக் குறைந்ததும் எட்டாண்டுகளுக்கு குறையாததுமான ஓய்வூதியமுடைய சேவையை உடையவருமான தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் பகிரங்க அலுவலரொருவராகவிருந்திருப்பின் அப்போது,—

(i) ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின் நோக்கங்களுக்காக மட்டும், அவர் கைமாற்றல் தேதியன்று தொலைத்தொடர்புத் திணைக்களத்தில் வகித்த பதவியை, அரசாங்கத்தின் கீழான அவரது ஓய்வூதியமுடைய சேவையுடன் சேர்க்கும்போது கூட்டுமொத்தத்தில் பத்தாண்டுகளைக் கொண்ட ஓய்வூதியமுடைய சேவையையாக்குகின்ற அத்தகைய காலப்பகுதிவரை வகிக்கின்றவராகக் கருதப்படுதல் வேண்டும்; கூட்டுத்தாபனத்தின் கீழான சேவை, அத்தகைய கூட்டுமொத்தத்தைக் கணிப்பதற்காக அரசாங்கத்தின் கீழான ஓய்வூதியமுடைய சேவையாகக் கணக்கிடப்படுதல் வேண்டும்;

(ii) அவர் தொடர்பில் கூட்டுத்தாபனமானது, கூட்டுத்தாபனத்தின் நிதிகளிலிருந்து திறைசேரிப் பிரதிச்செயலாளருக்கு, திரட்டு நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதற்கென ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின் நோக்கங்களுக்காக கைமாற்றல் தேதியன்று அவர் தொலைத்தொடர்பு திணைக்களத்தில் வகித்த பதவியை வகிக்கின்றவராகக் கருதப்படுகின்ற சேவைக்காலப் பகுதியின் ஒவ்வொரு பூரணமான மாதத்துக்கும் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய பணத்தொகையைச் செலுத்துதல் வேணமே: அத்துடன்

(iii) உப்பந்தி (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட காலப் பகுதியின் முடிவில் அவர் பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய காலப் பகுதி முடிவுற்றதன்மேல் பதவி இல்லாததாக்குகை என்ற ஏதுவின்மேல் பகிரங்க சேவையிலிருந்து அவர் ஓய்வுபெற்றிருப்பின் அவருக்கு வழங்கப்பட்டிருக்கக் கூடியதான ஓய்வூதியங்களின் மீதான குறிப்புகளின் கீழான அத்தகையதோர் ஓய்வூதியத்துக்குத் தகவுடையவராதலும் வேண்டும்;

(இ) முப்பதாம் பிரிவினது ஏற்பாடுகளையும் இப்பிரிவினது முற்போந்த ஏற்பாடுகளையும் பொருட்படுத்தாது, அத்துடன் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்விதமிருப்பினும், தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் பகிரங்க அலுவலர், 30 ஆம் பிரிவின் ஏற்பாடுகளினது நடைமுறையின் பயனைக்கொண்டு கூட்டுத்தாபனத்தின் ஊழியரொருவராகுமிடத்து,—

(i) இடமாற்றல் தேதியன்று அல்லது அதன்பின்னர் அத்தகைய அலுவலர் ஓய்வூதியமொன்றுக்குத் தகவுடையவராயிருந்து தமது முழு ஓய்வூதியத்தையும் பெற விருப்பம் தெரிவித்தால் கூட்டுத்தாபனத்துடன் அவர் ஊழியத்திலிருக்கும் காலப்பகுதியின்போது அவருக்கு அத்தகைய ஓய்வூதியம் செலுத்தப்படுதலாகாது;

(ii) அத்தகைய அலுவலர் ஓய்வூதியத்துக்குத் தகவுடையவராகவிருந்து ஓய்வூதியங்களின் மீதான குறிப்புகளின் 2அ(1) (i) என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அவரது ஓய்வூதியத்தின் நான்கிலொரு பாகத்தின் பகுதியளவிலான கணிப்பில் பணிக்கொடையொன்றைப் பெற விருப்பம் தெரிவித்தால்:—

(அஅ) அத்தகைய பணிக்கொடை அவருக்குச் செலுத்தப்படலாகாது, ஆனால் கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியமொன்றில் அவரது கணக்குக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்;

(ஆஆ) சொல்லப்பட்ட குறிப்புகளின் கீழ் அவருக்குச் செலுத்தப்படற்பாலதான ஓய்வூதியத்தின் எஞ்சிய நான்கில் மூன்று பாகம் அவர் கூட்டுத்தாபனத்துடன் ஊழியத்திலிருக்கும் காலப் பகுதியின் போது அவருக்குச் செலுத்தப்படுதலாகாது; அத்துடன்.

(இஇ) சொல்லப்பட்ட குறிப்புகளின் 2அ(1) (ii) என்னும் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட "அவரது ஓய்வு பெறுகைத் தேதியிலிருந்து பத்து ஆண்டுகளுக்கு" என்ற காலப்பகுதியைக் கணிக்கும் நோக்கத்துக்காக, அவரது ஓய்வு பெறுகைத் தேதியானது அவர் கூட்டுத்தாபனத்துடன் ஊழியம் செய்த கடைசித்தேதியாகக் கருதப்படுதல் வேண்டும்;

(iii) அத்தகைய அலுவலர் ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்துக்கல்லாது பணிக்கொடைக்குத் தகவுடையவராயிருப்பின், அத்தகைய பணிக்கொடை அவருக்குச் செலுத்தப்படலாகாது. ஆனல் கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியமொன்றில் அவரது கணக்குக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்,

(iv) அத்தகைய அலுவலர், பகிரங்க சேவைச் சகாய நிதியக் கட்டளைச் சட்டத்தின்கீழ் ஏதேனும் பணத்தொகையைப் பெறத் தகவுடையவராக விருப்பின், அத்தகைய பணத்தொகை அவருக்குச் செலுத்தப்படுதல் ஆகாது. ஆனல் கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியமொன்றில் அவரது கணக்குக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்துக்காகவும் அதன் சார்பிலும். பகிரங்க அலுவலர்களென்ற அவர்களது தன்மையில் வேலையை நிறைவேற்றுகையில் கைமாற்றல் தேதியன்றும் அதன் பின்னரும் திணைக்களத்தின் அத்தகைய அலுவலர்களாகத் தொடர்ந்திருக்கின்ற குறித்தசில ஆட்களுக்கு ஏற்புடையனவான விசேட ஏற்பாடுகள்

**32.** (1) இடமாற்றல் தேதியன்றும் அதன்பின்னரும் தொலைத் தொடர்புத் திணைக்களத்தின் பகிரங்க அலுவலரென்ற அவரது தன்மையில் கூட்டுத்தாபனத்துக்காகவும் அதன் சார்பிலும் வேலையை நிறைவேற்றும் அத்தகைய அலுவலராகப் பதவியில் தொடர்ந்திருக்கும் எவரேனுமாள் கூட்டுத்தாபனத்தின் பணியாட்தொகுதிக்கு அவரது சம்மதத்துடன் நியமிக்கப்படலாம்.

(2) எவரேனும் பகிரங்க அலுவலர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கூட்டுத்தாபனத்தின் பணியாட்தொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் V

### தொலைத்தொடர்புச் சேவைகளை நிறுவுவதற்காகவும், பேணுவ வதற்காகவும் அரச அல்லது தனியார் ஆதனங்களைப் பயன் படுத்துவதற்குமான உரிமை.

தொலைத் தொடர்புக் கம்பிகளையும் கம்பங்களையும் வைப்பதற்கும் பேணுவதற்கும் இயக்குநருக் குள்ள தத்துவம்.

33. (1) இயக்குவதற்காக அவர் உரிமமளிக்கப்பட்டுள்ள தொலைத்தொடர்புத் தொகுதி மூலம் தொலைத்தொடர்புச் சேவையை ஏற்பாடு செய்யும் நோக்கத்துக்காக இயக்குநர் அல்லது அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆட்கள் ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் கீழ் அதன் மேல், அதன் ஊடாக, குறுக்காக அதில் அல்லது அதன்மீது தொலைத்தொடர்புக்கம்பிகளையும் கம்பங்களை காலத்துக்குக்காலம் வைத்துப் பேணலாம். அத்துடன் அந்நோக்கத்துக்காகப் பின் வருவனவற்றைச் செய்தல் இயக்குநரால் தொழிலுக்கமர்த்தப் பட்டுள்ள அலுவலருக்கு அத்துடன் அத்தகைய அலுவலரால் அல்லது அவரின் கீழ் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள சேவையாளர் களுச்கு வேலையாட்களுக்கு, அத்துடன் கூலியாட்களுக்குச் சட்ட முறையானதாதல் வேண்டும்.: —

(அ) எல்லா நேரங்களிலும் நியாயமான அறிவித்தலின் மீது அவசியமான எல்லா வாகனங்களுடனும் எந்திரத்தொகுதிகளுடனும் ஆயுதங்களுடனும் அத்துடன் மற்றைய பொருட்களுடனும் ஏதேனும் காணிக்குட் பிரவேசித்து, ஏதேனும் தொலைத் தொடர்புக் கம்பி தாங்கி நிற்பதற்குத் தேவையாகக்கூடிய ஏதேனும் கம்பங்களை அதில் இடுதல்; அத்துடன்

(ஆ) அத்தகைய காணியில் வளரும் ஏதேனும் மரத்துக்கு அல்லது அதிலுள்ள ஏதேனும் கட்டடத்துக்கு, கட்டமைப்புக்கு அல்லது பொருளுக்கு அத்தகைய கம்பியைத் தாங்கக் கூடிய தாங்கிகளை அல்லது வேறு பொருட்களைச் சேர்த்துக் கட்டல் அல்லது இணைத்தல்; அத்துடன்

(இ) ஏதேனும் தொலைத்தொடர்புக்கம்பிக்கு ஏதேனும் விதத்தில ஊறு விளைக்கும் அல்லது ஊறை விளைக்கக் கூடிய அல்லது தடைசெய்யக்கூடிய அல்லது அதனுடன் தலையிடக்கூடிய ஏதேனும் மரத்தை அல்லது கிளையை வெட்டுதல் : அத்துடன்

(ஈ) ஏதேனும் தொலைத்தொடர்புக் கம்பியைத் தாபிக்கும், நிர்மாணிக்கும் பழுதுபார்க்கும் முன்னேற்றும், பரீட்சிக்கும், மாற்றும் அல்லது அகற்றும் அல்லது அதனுடன் ஏதேனும் விதத்தில் தொடர்புறுத்தப்பட்ட நோக்கத்துக்கு அவசியமானவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழானவையுமான வேறு எல்லா செயல்களையும் கருமங்களையும் விடயங்களையும் தனித்தனியே செய்தல் நிறைவேற்றல் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான ஏதேனும், செயலை, கருமத்தை அல்லது விடயத்தை நிறைவேற்றல் ;

ஆயின்,

(i) ஓர் இயக்குநர் எந்த ஆதனத்தின் கீழாக, மேலாக, அதனுடாக அதன் குறுக்கே, அதில்

அல்லது அதன்மீது எந்த தொலைத் தொடர்புக் கம்பி வைக்கப்பட்டுள்ளதோ அவ்வாதனத்தின் சொந்தக்காரனது எழுத்திலான அனுமதியுடன் தவிர, இச்சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ள, தத்துவங்களைப் பிரயோகித்தலாகாது ;

(ii) ஓர் இயக்குநர், அவரால் ஏற்பாடு செய்யப்பட்ட அல்லது செய்யப்படவுள்ள தொலைத்தொடர்புச் சேவையின் நோக்கங்களுக்காகத் தவிர இச்சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்தலாகாது;

(iii) அத்தகைய பிரயோகித்தலின் எதுவின் மீது அதனைப் பயன்படுத்தல் தவிர்ந்த, தொலைத் தொடர்புக் கம்பி அல்லது கம்பி எந்த ஆதனத்தின் கீழ், மேல் அதனுடாக குறுக்காக, அதில் அல்லது அதன் மீது வைக்கப்பட்டுள்ளதோ அந்த ஆதனத்தைக் கொள்ளுதலாகாது;

(iv) இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு தவிர, இயக்குநர் ஒருவர் அல்லது இயக்குநரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் அல்லது பகிரங்கக் கூட்டுததாபனத்தின் முகாமைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேனும் ஆதனம் தொடர்பில் அத்தத்துவங்களை, விடயத்துக்கேற்ப அத்தகைய உள்ளூரதிகாரசபையின் முதல்வர் அல்லது தவிசாளரின் அல்லது அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை அல்லது முகாமைச்சபையின் அனுமதியின்றிப் பிரயோகித்தலாகாது ; அத்துடன்

(v) ஒரு இயக்குநர் ஆதனத்துக்கு இயன்றளவில் மிகக் குறைந்த சேதத்தையே விளைத்தல் வேண்டுமெனபதுடன் அத்தத்துவங்களைப் பிரயோகிக்கும் காரணத்துக்காக அவர்களுக்கு ஏதேனும் நட்டம் அல்லது இழப்பு ஏற்பட்டால், அக்கறையுடைய எல்லா நபர்களுக்கும் நியாயமான நட்டஈடு செலுத்துதல் வேண்டும். ஆயின் அத்தகைய நபர்கள் அத்தகைய நட்டஈட்டுக்காக நட்டம் உறப்பட்ட முப்பது நாட்களுக்குள் அந்நோக்கத்துக்காக ஒரு விண்ணப்பத்தை இயக்குநருக்குச் செய்திருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் காப்பு வாசகத்தின் (v) ஆம் பந்தியில் உள்ளது எதுவும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் இயக்குனருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில் எவரேனும் ஒருவருக்கு இழப்பு அல்லது நட்டம் ஏற்படுமிடத்து அவர் நட்டஈடு கோரி அத்தகைய இயககுநருக்கெதிராக வழக்கொன்று தொடுப்பதினின்றும் அவரைத் தடை செய்யாது.

(3) ஓராம் உட்பிரிவின் காப்புவாசகத்தின் (v) ஆம் பந்தியின் கீழ் செலுத்தப்படற்பாலதான நட்டஈட்டின் போதாமை தொடர்பாக, ஏதேனும் பிணக்கு எழுமிடத்து, அத்தகைய பிணக்கு பிணக்குறும் திறத்தினர்களுள் எவரேனும் ஒருவரால் சுருக்க முறை நடபடிமுறையில், எந்த் மாவட்ட நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்துள் அவ்வாதனம் அமைந்துள்ளதோ அந்த மாவட்ட நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் ஒரு விண்ணப்பத்தின் மீது அந்நீதிமன்றத்தினால் சுருக்க முறையாகத் தீர்மானிக்கப் கப்படுதல் வேண்டும்.

(4) நட்டஈட்டைப் பெறுவதற்கு எந் நபர்கள் உரித்துடையவர்களென்று அல்லது அக்கறையுடைய நபர்கள் எத்தகைய விகிதாசாரப்படி அதனைப் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டுமென்பது பற்றி ஏதேனும் பிணக்கு எழுமிடத்து, இயக்குநர், எந்த மாவட்ட நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அவ்வாதனம் அமைந்துள்ளதோ அம்மாவட்ட நீதிமன்றத்தில் அவர் போதியதெனக் கருதும் அத்தொகையை அல்லது பிணக்குறும் திறத்தினர் எல்லோராலும், கொடுக்கப்பட்ட தொகை போதியதானதென எழுத்தில் ஏற்றுக்கொண்டுள்ளவிடத்து அல்லது தொகை (3) ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ளவிடத்து அங்ஙனம் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது தீர்மானிக்கப்பட்ட அத்தொகையைச் செலுத்தலாம்; அத்துடன் நீதிமன்றம், திறத்தினருக்கு அறிவித்தல் கொடுத்தபின்னரும் அவர்கள் விரும்பியபடி, அத்தகைய விசாரணை செய்தபின்னரும் விடயத்துக்கேற்ப நட்டஈட்டைப் பெற உரித்துடையவர்களை அல்லது அக்கறையுடைய நபர்கள் எந்த விகிதாசாரத்தில் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டுமென்பதைச், சுருக்குமுறையில் தீர்மானித்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின் கீழான எல்லா சட்ட நடவடிக்கைகளுக்குமான செலவு தொகைகள் மாவட்ட நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். இயக்குநர், (1) ஆம் உட்பிரிவின் காப்புவாசகத்தின் (v) ஆம் பந்தியின் கீழ் செலுத்தப்படவுள்ள நட்டஈட்டின் போதுமாந்தன்மை தொடர்பிலான ஒரு பிணக்கு இருந்தாலேயன்றி, ஏதேனும் செலவுதொகைகளைச் செலுத்தப் பொறுப்பாக்கப்படுதலாகாது என்பதுடன், அத்தகைய விடயத்தில், விண்ணப்பகாரரின் அவ்வுரிமைக் கோரிக்கை ஊதாரித்தனமானதாக அல்லது சொல்லப்பட்ட இயக்குநரிடம் தமது உரிமைக் கோரிக்கையைச் செய்வதில் அவர் மிகவும் கவனமின்மையாக இருந்தார் எனவும், செலவு தொகையிலிருந்து சில கழிப்பனவுகள் செய்யப்பட வேண்டும் அல்லது அவர் சொல்லப்பட்ட இயக்குநருக்கு செலவு தொகையின் ஒரு பாகத்தைச் செலுத்துதல் வேண்டுமென நீதிமன்றம் அபிப்பிராயப்பட்டால் அன்றியும், மாவட்ட நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் தொகை, இயக்குநரால் போதியதெனக் கருதப்பட்ட தொகையை விடக் கூடுதலானதாய் இருந்தாலேயன்றி, செலவு தொகைகளைச் செலுத்தப் பொறுப்பாக்கப்படுதலாகாது.

(6) இப்பிரிவினுள்ளது எதுவும் இயக்குநரால் எவருக்கு நட்ட ஈடு செலுத்தப்பட்டுள்ளதோ அத்தகைய நட்டஈட்டைப் பெற்ற நபரிடமிருந்து அதனை முழுமையாக அல்லது அதன் ஏதேனும் ஒரு பாகத்தை மீளப் பெற்றுக் கொள்ளும் ஒருவரது உரிமையைப் பாதிக்காது.

அசைவற்ற ஆதனத்தை இயக்குனர் பயன்படுத்துவதற்காக அதிகாரி எழுத்திலான சம்மதத்தைப் பெறுதல்.

34. (1) முப்பத்தி மூன்றும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் காப்பு வாசகத்தின் (i) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ள எழுத்திலான அனுமதியை, அசைவற்ற ஆதனத்தின் சொந்தக்காரன் இயக்குநருக்குக் கொடுக்கத் தவறுமிடத்து, அல்லது மறுக்குமிடத்து இயக்குநர் அத்தகைய நிகழ்வினை அதி காரிக்கு அறிக்கை செய்யலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் ஓர் அறிக்கை அதிகாரிக்குச் செய்யப் பட்டுள்ளவிடத்து தகுந்த விசாரணையின் பின்னர் அதிகாரி இயக்கு நரின் நியாயமான தேவைப்பாடுகளுடன் திருப்தியடையுமிடத்து, அவர் இயக்குநருக்காகவும் அவரது சார்பிலும் சொல்லப்பட்ட ஆதனத்தினது பயன்பாட்டுக்காக, சொல்லப்பட்ட எழுத்திலான அனுமதியைப் பெறுவதற்கு நியாயமானளவில் அவசியமான தெனக் கருதக்கூடிய அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

பிரிவு 33 க்கான காப்புவாசகத்தின் (iv) ஆம் பந்தியின்கீழ் நிபந்தனைகளுக்க மைய, அனுமதிய ளிப்பதற்கு உள்ளூரதிகாரச் சபைகளுக்கு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனங்க ளுக்குள்ள தத்துவம்.

35. (1) உள்ளூரதிகாரசபையின் முதல்வர் அல்லது தவிசாளர் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் பணிப்பாளர் சபை அல்லது முகாமைச்சபை, 33 ஆம் பிரிவுக்கான காப்புவாசகத்தின் (iv) ஆம் பந்தியின் ஏற்பாடுகளைக் கவனித்திற்கொண்டு, அப் பிரிவின் கீழான எல்லாத் தத்துவங்களையும் அல்லது அவற்றுள் எவற்றையும் ஆதனத்தின் பயன்பாட்டுக்காக உள்ளூரதிகார சபைக்கு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு ஒரு கட்டணத் தைக் கொடுப்பனவு செய்வதற்கமையவும், ஏதேனும் வேலையை நிறைவேற்றுவதற்கான காலம் அல்லது விதம் தொடர்பான அல்லது அப்பிரிவின் கீழ் இயக்குநரினுற் பொறுப்பேற்கப்பட்ட ஏதேனும் வேலையுடன் சம்பந்தப்பட்ட அல்லது தொடர்பான வேறேதும் காரியத்துக்கான நிபந்தனைகளுக்கமையவும் பிரயோகிப் பதற்கு இயக்குநருக்கு அதிகாரமளிக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் உள்ளூரதிகாரசபைக்கு அல்லது பகிரங்க கூட்டுத்தாபனத்துக்கு ஏதேனும் கொடுப்பனவு செலுத்த தப்படற்பாலதானதாகுமிடத்து அல்லது 37 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் நட்டஈடு செலுத்தப்படற்பாலதாகவிருக்கு மிடத்து எல்லாச் சூழ்நிலைகளையும் கணக்கிற் கொண்டு இயக்குநர், அத்தகைய் கொடுப்பனவை அல்லது நட்டஈட்டை மிகமிஞ்சியதாக அல்லது நியாயமற்றதாக பிணக்கிலிடுமிடத்து, அப்பொழுது அத்தகைய ஒவ்வொரு விடயத்திலும் அவ்வாறு பிணக்கிலுள்ள கருமம் தீர்மானத்துக்கென அதிகாரிக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அதிகாரி அதைத் தீர்மானித்தலும் வேண் டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான அதிகாரியின் தீர்மானத்தினால் இன்னலுறுகின்ற திறத்தினரொருவர், பிணக்கை, ஒவ்வொவொரு திறத்தினராலும் ஒருவர் நியமிக்கப்பட வேண்டியதான இரண்டு நடுத்தீர்ப்பாளர்களுக்கு ஆற்றுப்படுத்தலாம். அத்தகைய நடுத்தீர்ப்பாளர்கள் நடுத்தீர்ப்பைச் செய்ய முன்னர் நடுவரொருவரைத் தெரிவுசெய்தல் வேண்டுமென்பதுடன் விடயத்துக்கேற்ப அத்தகைய நடுத்தீர்ப்பாளர்களின் தீர்ப்பு அவர்கள் உடன்படும்போது, அல்லது நடுத்தீர்ப்பாளர்களிடையே வேறுபாடு காணப்படுமிடத்து நடுவரின் தீர்ப்பு இறுதியானதாதல் வேண்டும்.

36. இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் தொலைத் தொடர்புக் கம்பி அல்லது கம்பம், உள்ளூரதிகாரசபைக்கு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அதன் கட்டுப்பாட்டின் அல்லது முகாமையின் கீழுள்ள ஏதேனும் ஆதனத்தின் மீது, அதனூடாக அல்லது, குறுக்கே அதில் அல்லது அதன்மீது, இயக்குநரினால், இடப்பட்டுள்ளவிடத்து, அத்துடன் அத்தகைய உள்ளூரதிகாரசபை அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம் தொலைத் தொடர்புக் கம்பி அல்லது கம்பம் அவ்வாறு இடப்பட்டதிலிருந்து எழுந்துள்ள சூழ்நிலைகளைக் கவனத்திற்கொண்டு அது அகற்றப்பட வேண்டியது அல்லது அதன் நிலை மாற்றப்பட வேண்டியது அத்தியாவசியமானதாவும் அவசியமானதாகவும் உள்ளதெனக் கருதுமிடத்து, விடயத்துக்கேற்ப, உள்ளூரதிகாரசபையின் முதல்வர் அல்லது தவிசாளர் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை அல்லது முகாமைச்சபை அதனை அகற்றும்படி அல்லது அதன் நிலையை மாற்றும்படி இயக்குநருக்கு வேண்டுகோள் விடுக்கலாமென்பதுடன், 38 ஆம் பிரிவுக்கமைய இயக்குநர் அத்தகைய வேண்டுகோளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

*தொலைத் தொடர்புக் கம்பியை அல்லது கம்பத்தை அகற்றும்படி அல்லது மாற்றும்படித் தேவைப்படுத்துவதற்கு உள்ளூரதிகாரசபைக்கு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்குள்ள தத்துவம்.*

37. (1) இயக்குநர், உள்ளூரதிகாரசபைக்கு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்குரித்தாக்கப்பட்ட அல்லது அதன் கட்டுப்பாட்டின் அல்லது முகாமையின் கீழுள்ள ஏதேனும் ஆதனம் தொடர்பில் இச்சட்டத்தினால் அவருக்களிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்காக, விடயத்துக்கேற்ப உள்ளூரதிகாரசபையின் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் அனுமதிக்கமைய வாயு அல்லது நீர் வழங்குதலுக்கான (பிரதான குழாயல்லாத) ஏதேனும் குழாயின் அல்லது மின்சக்தியை வழங்குகின்ற ஏதேனும் கம்பியின் அல்லது முறுக்குக் கம்பியின் அல்லது வடத்தின் அல்லது (பிரதான வடிகாலமைப்பாயில்லாத) ஏதேனும் வடிகாலின் நிலையை மாற்றலாம்.

*வாயு அல்லது நீர்க்குழாய்களில் அல்லது வடிகாலமைப்புக்களின் நிலையை மாற்றுவதற்கான தத்துவம்.*

(2) உள்ளூரதிகாரசபையின் முதல்வர் அல்லது தவிசாளர் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்சபை அல்லது முகாமைச்சபை இயக்குநரால் அத்தகைய தத்துவங்களை பிரயோகிக்கையில் செய்யப்படும் ஏதேனும் வேலையைக் கண்காணிப்பதற்கென ஆளொருவரை அனுப்பலாமென்பதுடன், இயக்குநர் அவ்வாறு அனுப்பப்பட்ட ஆளின் நியாயமான திருப்திக்கு வேலையை நிறைவேற்றுதலும், அவரின் தத்துவங்களைப் பிரயோகிப்பதனால் ஏதேனும் சேதம் ஏற்படும் பட்சத்தில் நியாயமான நட்டஈட்டைச் செலுத்துதலும் வேண்டும்.

இயக்குநர், உள்ளூரதிகார சபை அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத் திறகிடையிலான பிணக்குகள்.

38. (1) (அ) பிரிவு 33 க்கான காப்புவாசகத்தின் (iv) ஆம் பந்தியின் குறிப்பீடு செய்யப்பட்ட அனுமதி, உள்ளூரதிகாரசபையின் முதல்வரினால் அல்லது தவிசாளரினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினால் அல்லது முகாமைச் சபையினால் மறுக்கப்படுவதிலிருந்து ; அல்லது

(ஆ) உள்ளூரதிகாரசபையினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் 36 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் வேண்டுகோளிலிருந்து,

விளைகின்றதான, விடயத்துக்கேற்ப இயக்குநருக்கும் உள்ளூரதிகார சபையின் முதல்வருக்கும் அல்லது தவிசாளருக்கும் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபைக்கும் அல்லது முகாமைச் சபைக்கு மிடையேலான பிணக்கொன்று எழுகின்ற பட்சத்தில் பிணக்கினுள்ள கருமம் தீர்மானத்துக்கென அதிகாரிக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியின் கீழ் அதிகாரியின் தீர்மானத்தினால் அதிருப்தியுறுகின்ற பிணக்குக்கான திறத்தவர் ஒருவர், அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அத்தீர்மானம் அவருக்கு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள். அதற்கெதிராக மேன்முறையீடு செய்யலாமென்பதுடன், அத்தகைய ஏதேனும் முடிவின் மீது அவரது தீர்மானம் இறுதியானதாதலும் வேண்டும்.

இயக்குநரின் சட்டமுறையான தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கான எதிர்ப்பு முதலியன.

39. இயக்குநரொருவருக்கு 33 ஆம் பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில் எவரேனும் ஆள் நியாயமான காரணமின்றி இயக்குநரை அல்லது இயக்குநரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளை எதிர்த்தால் அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிட்டால் அல்லது, எதிர்ப்பதாக அல்லது முட்டுக்கட்டையிடுவதாக அச்சுறுத்தினால் அல்லது அவ்வாறு செய்வதற்கு எத்தனித்தால், அவர் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறுயினும் சொந்தக்காரராகவுள்ள, அத்தகைய ஆள், 33ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் (i)ஆம் பந்தியின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட எழுத்திலான சம்மதத்தைக் கொடுப்பதற்கு மறுக்கிறாரென்ற நிகழ்வின் காரணமாக மட்டும் இவ்வுட்பிரிவின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதலாகாது.

தொலைத் தொடர்புக் கம்பியை அல்லது கம்பத்தை அகற்றும்படி அல்லது மாற்றும்படி வேண்டுகோள் விடுப்பதற்கான உரிமை.

40. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தொலைத் தொடர்புக் கம்பி அல்லது கம்பம் ஒன்று, ஏதேனும் ஆதனத்தின் கீழ் அதன் மேல், அதனுடாக அதன் குறுக்காக அதில் அல்லது அதன்மீது இயக்குநரொருவரினால் இடப்பட்டு, அவ்வாறு செய்வதற்கு உரித்துடைய எவரேனுமாள் தொலைத்தொடர்புக் கம்பி அல்லது கம்பம் அவ்வாதனத்தின் வேறேதேனும் பாகத்துக்கு அல்லது ஓர் உயர்ந்த அல்லது தாழ்ந்த மட்டத்துக்கு அகற்றப்பட வேண்டுமென்பதை அல்லது மாதிரியில் மாற்றப்பட வேண்டுமென்பதை அவசியமாக்கும் அல்லது வசதியாக்கும் அத்தகையதொரு முறையில் அவ்வாதனத்தைக் கையாளவிரும்புமிடத்து, அவர் அதற்கிணங்கக் கம்பியை அல்லது கம்பத்தை அகற்றும்படி அல்லது மாற்றும்படி இயக்குநருக்கு வேண்டுகோள் விடுக்கலாம்:

ஆயின், 33ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் (v) ஆம் பந்தியின்கீழ் அத்தகைய ஆளுக்கு நட்டஈடு செலுத்தப்பட்டிருப்பின், அவர் அவ்வேண்டுகோளை விடுக்கும்போது அகற்றுகையின் அல்லது மாற்றுகையின் செலவுகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான போதிய தொகையொன்றை இயக்குநருக்கு அளித்தல் வேண்டும்.

(2) இயக்குநரொருவர் நியாயமானதொரு காலத்தினுள் வேண்டுகோளுக்கிணங்கியொழுகத் தவறினால் அதனை, விடுக்கும் ஆள் கம்பியை அல்லது கம்பத்தை அகற்றும்படி அல்லது மாற்றும்படி இயக்குநரைத் தேவைப்படுத்துமாறு அதிகாரிக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டின்பின்னர் வேண்டுகோளை விடுக்கின்ற ஆள், கம்பியின் அல்லது கம்பத்தின் அகற்றுகையை அல்லது மாற்றுகையைப் பெற்றுக் கொள்ளத் தவறியுள்ளவிடத்து ஆதனம் எந்த மாவட்ட நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ளதோ அந்த மாவட்ட நீதிமன்றத்துக்கு அத்தகைய அகற்றுகையை அல்லது மாற்றுகையைத் தேவைப்படுத்தும் கட்டளை ஒன்றுக்காக சுருக்க நடவடிக்கைமுறையிலான விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழான விண்ணப்பத்தைப் பெறுகின்ற மாவட்ட நீதிமன்றமொன்று அத்தகைய விண்ணப்பத்தை நிராகரிக்கலாம். அல்லது தொலைத் தொடர்புக் கம்பியை அல்லது கம்பத்தை ஆதனத்தின் வேறேனும் பாகத்துக்கு அல்லது உயர்ந்த அல்லது தாழ்ந்த மட்டத்துக்கு அகற்றுவதற்காக அல்லது அதன் மாதிரியை மாற்றுவதற்காக அதன் தற்றுணிபின்படி முற்றுமுழுதாக அல்லது நிபந்தனைகளுக்கமைய காசுக் கட்டளையொன்றை ஆக்கலாம்.

தொலைத் தொடர்புக் கம்பியை ஊறுபடுத்தும் சாத்தியம் கொண்ட மரங்களை அல்லது சிறுபற்றைகளை நடுதல்.

**41.** ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின்கீழ், அதன் மேல் அதனுடாக அல்லது அதன் குறுக்கே தொலைத்தொடர்புக் கம்பியொன்று இடப்பட்டுள்ள ஏதேனும் விடயத்தில், அத்தகைய தொலைத்தொடர்புக் கம்பி அவ்வாறு இடப்பட்டுள்ள தேதிக்குப் பின்னர் அத்தகைய தொலைத்தொடர்புக் கம்பியை ஊறு படுத்தும், தடங்கல் செய்யும் அல்லது அதனோடு தலையிடும் சாத்தியம் கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் மரத்தை அல்லது சிறுபற்றையை நடுகின்ற ஆளெவரும், 33ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய மரம் அல்லது சிறுபற்றை அல்லது அதன் கிளை எதுவும் வெட்டி வீழ்த்தப்படின் ஏதேனும் நட்டஈட்டைப் பெறுவதற்கு உரித்துடையவராதலாகாது.

இச்சட்டம் நடைமுறைக்கு வருமுன்னர் தாபிக்கப்பட்ட தொலைத் தொடர்புக் கம்பங்களுக்கும் கம்பிகளுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் நீடிக்கப்படல்.

42. அரசாங்கத்தினால் தாபித்துப் பேணப்பட்ட தொலைத் தொடர்பு நோக்கங்களுக்காக ஏதேனும் ஆதனத்தின்கீழ், அதன் மேல், அதனூடாக, அதன் குறுக்கே, அதில் அல்லது அதன்மீது இப்பிரிவு நடைமுறைக்கு வர முன்னர் இடப்பட்ட ஒவ்வொரு தொலைத்தொடர்புக் கம்பி அல்லது கம்பம் இச்சட்டத்தின் எல்லாத் தேவைப்பாடுகளையும் கடைபிடித்தபின்னர் அதனால் அளிக்கப்பட்ட தத்துவங்களைப் புரிகையில் இடப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் VI

### தவறுகளும் தண்டங்களும்.

தவறுகளை விளங்குதல்.

43. (1) இச்சட்டத்தின் ஏற்பாடு எதற்கும் அல்லது அதன் கீழாக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதிக்கு அல்லது விதிக்கு அல்லது அதன்கீழ் விதிக்கப்பட்ட தேவைப்பாடு எதற்கும் அல்லது அதன்கீழ் கொடுக்கப்பட்ட கட்டளை, அளிப்பு அல்லது பணிப்பு, எதற்கும் இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது அவற்றை மீறுகின்ற ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான தவறுகள் யாவும் நீதிவான் நீதிமன்றத்தினால் சுருக்கமுறையாக விளங்கப்படற்பாலனவாதல் வேண்டும்.

19 ஆம் பிரிவின் கீழும் 22 ஆம் பிரிவின் கீழுமான தவறுகள்.

44. (1) பத்தொன்பதாம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழான அல்லது 22ஆம் பிரிவின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளி யாகும் ஒவ்வோர் ஆளும், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருபதினாயிரம் ரூபாவுக்குக் குறையாததும், ஒரு லட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங் களுக்குக் குறையாததும் மூன்று ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலப்பகுதிக்கு இருவகையில் ஒரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(2) பத்தொன்பதாம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழான தவறொன்றுக்குக்குற்றவாளியாகும் ஒவ்வோர் ஆளும் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபதினாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாததும் ஆறுமா தங்களை விஞ்சாததுமான ஒரு காலப்பகுதிக்கு இருவகையில் ஒரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

தகவலை ஒலிக் கடத்தல் அல்லது ஒலிவாங்கல் ஆகியவற்றுக் கான தண்டம்.

45. இச்சட்டத்தினை அல்லது அதன் கீழாக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளை மீறி தொலைத்தொடர்புச் சேவையொன்று ஏற் பாடு செய்யப்பட்டுள்ளதென அறிந்து கொண்டு அல்லது நம்பு வதற்குக் காரணத்தைக் கொண்டிருந்து

(அ) அத்தகைய தொலைத்தொடர்புச் சேவை மூலம் தகவல் எதனையும் ஒலிக்கடத்துகின்ற அல்லது ஒலிவாங்குகின்ற; அல்லது

(ஆ) அதன் இடைநேர்விளைவான ஏதேனும் சேவையை நிறைவேற்றுகின்ற ; அல்லது

(இ) அத்தகைய தொலைத்தொடர்புச் சேவையின் ஊடாக ஒலிக்கடத்துவதற்காக ஏதேனும் தகவலை ஒப்படைக்கின்ற ; அல்லது

(ஈ) அதன் மூலம் அனுப்பப்பட்ட ஏதேனும் தகவலின் ஒப்படைப்பை ஏற்றுக்கொள்ளுகின்ற,

ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கும் அத்தகைய குற்றப் பணத்தைக் கொடுப்பனவு செய்வதில் தவறுமிடத்து, மூன்று மாதங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு இருவகையில் ஒரு வகையான மறியற்றண்டனைக்கும் ஆளாதலும் வேண்டும்.

**தொலைத் தொடர்புச் சேவையை மோசடியாகப் பயன்படுத்தல்.**

46. தொலைத்தொடர்புச் சேவையை ஏற்பாடு செய்வதற்கு ஏற்புடைத்தான ஏதேனும் இறுப்பனவைக் கொடுப்பனவு செய்வதைத் தவிர்த்துக் கொள்ளும் கருத்துடன் இயக்குநரால் ஏற்பாடு செய்யப்பட்ட அத்தகைய சேவையை நேர்மையீனமாகப் பெற்றுக்கொள்ளுகின்ற அல்லது பயன்படுத்துகின்ற ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருபதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் அத்தகைய குற்றப் பணத்தைக் கொடுப்பனவு செய்வதற்குத் தவறுமிடத்து ஆறு மாதங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு இருவகையில் ஒரு வகையான மறியற்றண்டனைக்கும் ஆளாதல் வேண்டும்.

**தொலைத் தொடர்பு நிறுவுகையை வேண்டுமென்று சேதப்படுத்துவதற்கான அல்லது கையாடுவதற்கான தண்டம்.**

47. (அ) ஏதேனும் தகவல் ஒலிக்கடத்தப்படுவதை அல்லது ஒப்படைக்கப்படுவதைத் தடுக்கும் அல்லது முட்டுக்கட்டையிடும் ; அல்லது

(ஆ) ஏதேனும் தகவலைக் குழப்பும் அல்லது அதன் உள்ளடக்கங்களை அறிந்து கொள்ளும் ; அல்லது

(இ) ஒலிக்கடத்துவதற்குத் தமக்கு அதிகாரமில்லாத ஏதேனும் தகவலை ஒலிக்கடத்தும் ; அல்லது

(ஈ) விஷமத்தனத்தை அல்லது சீரழிப்புச் செயல் எதனையும் புரியும்

உட்கருத்துடன் ஏதேனும் தொலைத்தொடர்புத் தொகுதியில் அல்லது அதன் மூலமாக ஏதேனும் சேவையை ஏற்பாடு செய்வதன் பாகமாகவுள்ள அல்லது அது தொடர்பில் பயன்படுத்தப்படும் ஏதேனும் தொலைத்தொடர்பு நிறுவுகையின் கம்பி, கம்பம் அல்லது எத்தன்மைத்தான வேறு பொருள் எதனையும் சேதப்படுத்துகின்ற, அகற்றுகின்ற கையாடுகின்ற ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருபதினாயிரம் ரூபாவை விஞ்சாத

குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு இருவகையில் ஒருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

தொலைத் தொடர்பு அலுவலர் ஆகியோருக்கு பொய்யான அல்லது புனையப் பட்ட தகவலைக் கொடுப்பதற்கான தண்டம் முதலியன.

48. பொய்யானதென அல்லது புனையப்பட்டதென ஆள் ஒருவர் அறிந்த தகவலொன்றை ஒலிக்கடத்துகின்ற அல்லது ஒலிக்கடத்துவிக்கின்ற அல்லது தொலைத்தொடர்பு மூலமாக ஒலிக்கடத்துவதற்காக அல்லது ஒப்படைப்பதற்காக எவரேனும் தொலைத் தொடர்பு அலுவலரிடம் அல்லது தொலைத் தொடர்புச் சேவையுடன் சம்பந்தப்பட்ட அலுவலகமுறையான கடமைகளைக் கொண்டுள்ள எவரேனும் ஆளிடம் சமர்ப்பிக்கின்ற அல்லது சமர்ப்பிக்கச் செய்கின்ற ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இருபதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று ஆண்டுகளை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும். ஏதேனும் செய்தி பொய்யானதென அல்லது புனையப்பட்டதெனத் தமக்குத் தெரியாதென எண்பிக்கும் பொறுப்பு இப்பிரிவின்கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் மேலாதல் வேண்டும்.

தொலைத் தொடர்பு அலுவலர் ஆகியோரால் புரியப்படும் தவறுகள்.

49. தொலைத்தொடர்பு அலுவலர் ஒவ்வொருவரும் அல்லது தொலைத்தொடர்புச் சேவையுடன் தொடர்புபட்ட அலுவலகக் கடமைகளைக் கொண்டுள்ள எவரேனும் ஆள்—

(அ) ஒலிக்கடத்துவதற்காக அல்லது ஒப்படைப்பதற்காகத் தாம் பெற்ற ஏதேனும் தகவலின் உள்ளடக்கங்களை அவரது கடமையின்போது தவிர, வேண்டுமென்று அழித்தால், மறைத்தால், மாற்றினால் அல்லது வேண்டுமென்றே வேறுவகையாகத் திரிபுபடுத்தினால் அல்லது அதனுடன் தலையீடு செய்தால் ; அல்லது

(ஆ) வேண்டுமென்று இச்சட்டத்தின்கீழ் அவ்வாறு செய்வதற்குத் தத்துவமளிக்கப்பட்ட எவரேனும் அதிகாரிக்குக் கீழ்ப்படியாது அல்லது வேறுவகையாக ஏதேனும் செய்தியை ஒலிக்கடத்தாது விட்டால் அல்லது இடைமறித்தால் அல்லது தடுத்து வைத்தால் ; அல்லது

(இ) அவரது அலுவலக முறையான கடமையைப் பின்பற்றி அல்லது நீதிமன்றத்தினால் பணிக்கப்பட்டவாறல்லாத வேறுவகையாக எவ்வாளுக்கு தகவல் முகவரியிடப்பட்டதோ அவ்வாள் தவிர்ந்த வேறு ஆள் எவருக்கும் ஏதேனும் தகவலின் உள்ளடக்கங்களை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை வெளியிட்டால்,

அவா தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களை விஞ்சாத ஒருகாலப்பகுதிக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

தொலைத் தொடர்பு அலுவலகத்துக் குள் அல்லது வளவுகளுக்குள் உள்ளீடுசெய் வதற்கான அல்லது தொலைத் தொடர்பு அலுவலரை முட்டுக்கட்டையிடு வதற்கான தண்டம்.

50. (அ) தொலைத்தொடர்பு அலுவலகத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரின் அனுமதியில்லாமல் அவ்வலுவலகத்துள் நுழைகின்ற ; அல்லது

(ஆ) அவ்வாறு நுழைவதனைத் தடுக்கின்ற ஏதேனும் ஒழுங்கு விதியை அல்லது அறிவித்தலை மீறி அத்தகைய தொலைத்தொடர்பு அலுவலகத்தைச் சுற்றியுள்ள வேலியிடப்பட்ட அடைப்புக்குள் நுழைகின்ற ; அல்லது

(இ) அதன்கண் ஊழியத்துக்கமர்த்தப்பட்ட அத்தகைய எவரேனும் அலுவலரால் அல்லது சேவையாளரால் அத்தகைய அலுவலகத்தை அல்லது அடைப்பை விட்டு வெளியேறுமாறு கேட்கப்பட்டதன்மேல் அவ்வாறு செய்வதற்கு மறுக்கின்ற ; அல்லது

(ஈ) அத்தகைய எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் தமது கடமையை நிறைவேற்றுகையில் அவரை வேண்டுமென்று முட்டுக்கட்டையிடுகின்ற அல்லது அவருக்குத் தடங்கல் செய்கின்ற;

ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றபணமொன்றுக்கும், அத்துடன் அத்தகைய குற்றப் பணத்தைக் கொடுப்பனவு செய்வதில் தவறுமிடத்து மூன்று மாதங்களை விஞ்சாத இருவகையில் ஒருவகையான மறியற்றண்டனைக்கும் ஆளாதல் வேண்டும்.

தகவலின் உள்ளடங்களைத் தெரிந்துகொள்ளும் கருத்துடன் உள்ளீடுசெய்தல் முதலியவற்றுக் கான தண்டம்.

51. ஏதேனும் தகவலின் உள்ளடக்கங்களைச் சட்டவிரோதமாகத் தெரிந்துகொள்ளும் கருத்துடன் அல்லது இச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படற்பாலதான ஏதேனும் தவறைப்புரியும் கருத்துடன் 50 ஆம் பிரிவில் கூறப்பட்ட செயல்களுள் எதனையேனும் செய்கின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் 50 ஆம் பிரிவினால் விதித்துரைக்கப்பட்ட குற்றப் பணத்துடன் மேலதிகமாக ஆறுமாதங்களை விஞ்சாத ஒரு காலப் பகுதிக்கு இருவகையில் ஒருவகையான மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

தகவலின் உள்ளடக்கங்களுடன் உள்ளீடு செய்வதற்கான தண்டம்.

52. சட்டப்படியான அதிகாரமின்றி,

(அ) தகவலொன்றின் உள்ளடக்கங்களை அல்லது அதன் பயன்படு செய்தியை மின்னியக்க அல்லது வேறுவகையில் ; அல்லது

(ஆ) ஏதேனும் தகவலுடன் அல்லது அதன் பயன்படு செய்திகளுடன் தலையீடு செய்யும் நோக்கத்துடன் ; அல்லது

(இ) ஏதேனும் தகவலின் அல்லது அதன் பயன்படு செய்தியின் உள்ளடக்கங்களை சட்டமுரணாக அறியும் நோக்கத்துடன் ; அல்லது

(ஈ) இச்சட்டத்தின்கீழ் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றைப் புரியும் நோக்கத்துடன்

உள்ளீடு செய்யும் ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இருபதினாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டு வருடங்களுக்கான ஒரு காலப்பகுதிக்கு இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

இப்பிரிவினதும், 54 ஆம் பிரிவினதும் நோக்கத்துக்காக "பயன்படு செய்தி" என்பது அழைக்கும் சந்தாதாரரின், அழைத்த சந்தாதாரரின் அடையாளம், தகவல், புறப்பட்டதேதியும் இடமும், அத்துடன் தகவலின் தன்மை ஆகியன தொடர்பான செய்தியாகும்.

தொலைத் தொடர்பு ஒலிக்கடத்தலை வேண்டுமென்று இடைமறித்தல்.

53. பொதுமக்கள் ஒலிவாங்குவதற்குக் கருதப்படாத ஏதேனும் தொலைத்தொடர்பு ஒலிக்கடத்தலின் உள்ளடக்கங்களை வேண்டுமென்று இடைமறிக்க நாடி முறைகேடாக அறிந்து கொள்ளுகின்ற ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு இருவகையில் ஒருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

தகவலின் உள்ளடக்கங்கள், தொலைத் தொடர்பு அலுவலரினால் இடைமறிக்கப் படுதலும் வெளியிடப்படுதலும்.

54. (1) மூன்றும் உட்பிரிவில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக, தொலைத்தொடர்பு, அலுவலர் ஒவ்வொருவரும் அல்லது தொலைத்தொடர்பு தொகுதியொன்று தொடர்பில் அலுவலக முறையான கடமைகளைக் கொண்டுள்ள எவரேனும் ஆள், அவரது கடமையின்போது தவிர வேறுவகையாக—

(அ) அத்தொகுதி மூலம் ஒலிகடத்தப்பட்ட அல்லது அதன் பயன்படு செய்தியை, செய்தியொன்றை வேண்டுமென்று இடைமறித்தால் ; அல்லது

(ஆ) அத்தொகுதி மூலம் அனுப்பப்பட்டு அவரால் இடைமறிக்கப்பட்ட ஒரு செய்தியின் உள்ளடக்கங்களை எவரேனும் ஆளுக்கு வேண்டுமென்று வெளிவிட்டால்,

அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) மூன்றும் உட்பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக தொலைத்தொடர்பு அலுவலர் ஒவ்வொருவரும் அல்லது தொலைத் தொடர்பு தொகுதியொன்றை இயக்குதல் தொடர்பாக அலுவலக முறையான கடமைகளைக் கொண்டுள்ள எவரேனும் ஆள், தமது கடமையின் போதல்லாது வேறுவகையாக அத்தொகுதிக்கூடாக வேறு எவரேனும் ஆளுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட தொலைத் தொடர்புச் சேவைகளைக் குறித்துரைக்கும் கணக்குக் கூற்று உள்ளடக்கங்களை எவரேனும் ஆளுக்கு வேண்டுமென்று வெளி விட்டால், அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அமைச்சரின் கைப்பட விடுக்கப்பட்ட பணிப்பு எதற்கும் கீழ்ப்படிவாகச் செய்யப்பட்ட எதற்கும் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையன வாகா; அத்துடன் ஏதேனும் குற்றவியல் தவறின் புலனாய்வு சம்பந்தமான அல்லது எவையேனும் குற்றவியல் வழக்கு நட வடிக்கைகளின் நோக்கங்களுக்காகச் செய்யப்பட்ட வெளிவிடுகை எதற்கும் அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியும் (2) ஆம் உட்பிரிவும் ஏற்புடையவையாகா.

(4) இப்பிரிவின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகும் அலு வலர் அல்லது ஆள் ஒவ்வொருவரும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு இரு வகையில் ஒருவகையான மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண் டும்.

*தொலைத் தொடர்புக்கம்பி முதலியனவற்றுக்கு எதனையும் சேர்ப்பதற்கான தண்டம்.*

**55.** சட்டப்படியான அதிகாரமின்றித் தொலைத்தொடர்புக் கம் பம் ஒன்றில் ஏறுகின்ற அல்லது ஏதேனும் தொலைத்தொடர்புக் கம்பி, கம்பம் அல்லது வேறு உபகரணத்துக்கு எதனையும் சேர்க்கின்ற ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளி யாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு ஆளா தலும் வேண்டும்.

*கட்டணம் செலுத்தப்படாத தகவலை ஒலிக்கடத்துதல் தடை செய்யப் பட்டுள்ளது.*

**56.** தொலைத்தொடர்பு அலுவலர் ஒவ்வொருவரும் அல்லது தொலைத்தொடர்பு அலுவலகம் ஒன்றுகப் பயன்படுத்தப்படும், ஏதேனும் அலுவலகத்துடன் சம்பந்தப்பட்ட அலுவலக முறை யான கடமைகளை உடைய வேறு ஆள் இயக்குநருக்கு மோசடி உண்டுபண்ணும் எண்ணத்துடன் இயக்குநர் ஒருவரால் விதித் துரைக்கப்பட்ட இறுப்பனவு செலுத்தப்பட்டிராத தகவல் எதனை யும் தொலைத்தொடர்பு மூலம் ஒலிக்கடத்த அல்லது ஒலிக் கடத்தச் செய்து அல்லது ஒப்படைத்து அல்லது ஒப்படைக்கச் செய்யுமிடத்து அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண் டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்றாண்டு களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு இருவகையில் ஒருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற் றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

தொலைத் தொடர்பு அலுவலரின் துர்நடத்தைக்கான தண்டம்.

57. ஏதேனும் தகவலைச் சரியாக ஒலிக்கட்த்துதல் அல்லது ஒப்படைத்தல் தடங்கற்படக்கூடியவிதமாக அல்லது தாமதப்படக் கூடிய விதமாகக் குடிபோதையில் இருக்கும் அல்லது மருத்துவ ரீதியாக விதித்துரைக்கப்படாத மருந்துகளின் தாக்கத்தின்கீழ் இருக்கும் அல்லது கவனமின்மையாக இருக்கும் அல்லது வேறு துர்நடத்தைக்குக் குற்றவாளியாகும் தொலைத்தொடர்பு அலுவலர் ஒவ்வொருவரும் அல்லது தொலைத்தொடர்புச் சேவையுடன் சம்பந்தப்பட்ட அலுவலக முறையான கடமைகளைக் கொண்டுள்ள வேறு ஆளும் அத்துடன் ஏதேனும் தகவலை ஒலிக்கடத்துவதில் அல்லது ஒப்படைப்பதில் தாமதப்படுத்துகின்ற, அல்லது தவறுகின்ற அத்தகைய அலுவலர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணத்துக்கு அல்லது மூன்று மாதங்களை விஞ்சாத ஒரு காலப் பகுதிக்கு இரு வகையில் ஒருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

ஒழுக்கக்கேடான அல்லது கண்ணிய மற்ற அல்லது தேசத்துரோக மான தகவலை முன் வைப்பதற் கான தண்டம்.

58. ஒவ்வோர் ஆளும் தாமாகவோ அல்லது தமது முகவர் மூலமோ அல்லது சேவையாளர் மூலமோ கண்ணியமற்ற ஒழுக்கக் கேடான, தேசத் துரோகமான, தூஷணமான, அச்சுறுத்துகின்ற அல்லது பாரிய தீங்கு விளைக்கும் தன்மைத்தான ஏதேனும் தகவலைத் தொலைத்தொடர்பு அலுவலகம் எதிலும் ஒலிக்கடத்துவதற்காக முன்வைத்தால் அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு இருவகையில் ஒரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

தொலைபேசி அழைப்புக்கள் மூலம் தொந்தர வை ஏற்படுத்து வதற்கான தண்டம்.

59. (1) எவரேனும் தொலைத்தொடர்பு அலுவலருக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்குத் தொந்தரவை அல்லது வசதியீனத்தை விளைவிக்கும் நோக்கத்துக்காகவும் நியாயமான காரணமின்றியும் விடாப்பிடியாகத் தொலைபேசி அழைப்புக்களைச் செய்கின்ற ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கும், அத்தகைய குற்றப்பணத்தைக் கொடுப்பனவு செய்வதில் தவறுமிடத்து, மூன்று மாதங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு இருவகையில் ஒரு வகையான மறியற்றண்டனைக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஒராமுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட விவரணத்திலான அழைப்பொன்றை அல்லது இடைமறித்தல், கண்காணித்தல், அல்லது அதனைப் பதிவு செய்தல் அத்தகைய அழைப்பொன்றை செயப்படுவதனை அனுமதிக்க மறுத்தல் தொலைத்தொடர்பு அலுவலர் ஒருவருக்குச் சட்டபூர்வமான தாதல் வேண்டும்.

(3) இரு வேறு ஆட்களுக்கிடையே இடம்பெறும் தொலைபேசிச் சம்பாஷணையை சட்டவிரோதமாகவும் வேண்டுமென்றும் உற்றுக் கேட்கின்ற ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு, அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு இருவகையில் ஒருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

**தவறுதலாக ஒப்படைக்கப்பட்ட தகவலை வைத்திருப்பதற்கான தண்டம்.**

60. வேறோர் ஆளுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டிய தகவல் ஒன்றை மோசடியாக வைத்திருக்கின்ற, அல்லது வேண்டுமென்று மறைத்துவைக்கின்ற அல்லது கொண்டு அகல்கின்ற அல்லது தடுத்துவைக்கின்ற அல்லது அத்தகைய ஏதேனும் தகவலை ஒப்படைக்குமாறு தொலைத்தொடர்பு அலுவலர் ஒருவரால் தேவைப்படுத்தப்பட்டதன்மேல் அவ்வாறு செய்வதற்கு அசட்டையாக இருக்கின்ற அல்லது மறுக்கின்ற ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு இருவகையில் ஒருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

**தொலைத்தொடர்பு முறுக்குக் கம்பி தொடர்பான தவறு.**

61. (1) ஏதேனும் தொலைத்தொடர்பு முறுக்குக் கம்பியைத் தமது உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருப்பவரும் அத்தகைய முறுக்குக் கம்பி சட்டபூர்வமாகப் பெறப்பட்டதென நிலைநாட்ட இயலாதவருமான ஆள் எவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு அல்லது மூன்று ஆண்டுகளை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு இருவகையில் ஒருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கத்துக்காக "தொலைத்தொடர்பு முறுக்குக் கம்பி" என்பது தொலைத்தொடர்பு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் உலோகஞ்சார் மற்றும் உலோகஞ்சாராத சகல கடத்திகளும் என்று பொருளாகும்.

(2) பிரச்சினையில் உள்ள தொலைத்தொடர்பு முறுக்குக் கம்பி எதுவும் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட விவரணத்தைச் சார்ந்ததெனச் சான்றுப்படுத்தி அதிகாரியினால் கைப்பட எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கைப்பட்டதாகக் கொள்ளப்படும் சான்றிதழ் ஒன்று, சட்ட நீதிமன்றத்தில் ஏற்தகவுடையதாதல் வேண்டும் என்பதுடன், அதன்கண் கூறப்பட்ட கூற்றுக்களின் உண்மையேற்றிய முதற்றோற்ற அளவிலான எண்பிப்பாதலும் வேண்டும்.

(3) ஓராமுட்பிரிவின் கீழான தவறென்றை—

(அ) புரிய எத்தனிக்கின்ற அல்லது அதனைப் புரிவதற்கு ஆயத்தமான ஏதேனும் செயலைச் செய்கின்ற, அல்லது

(ஆ) அதனைப் புரிய வேருேர் ஆளுக்கு உதவியளிக்கின்ற அல்லது உடந்தையளிக்கின்ற, அல்லது

(இ) அதனைப் புரிவதில் வேருேர் ஆளுடன் சதிசெய்கின்ற; எவரேனும் ஆள், அத்தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தவறென்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் ஒருவருக்குக் குறித்துரைக்கப்பட்ட அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

தவறுகளைப்புரிய எத்தனிப்பதற்கான தண்டம்.

62. இச்சட்டத்தின்கீழ் தண்டிக்கப்படற்பாலதான தவறு எதனையும் புரிவதற்கு எத்தனிக்கின்ற ஆளெவரும் தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அத்தவறுக்கென இதனகத்து ஏற்பாடு செய்யப்பட்ட தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

பொதுவான தண்டங்கள்.

63. இச்சட்டத்திஞல் தண்டனை எதுவும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்படாத தவறென்றுக்குக் குற்றவாளியாகும் ஒவ்வோர் ஆளும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கும் அத்தகைய குற்றப்பணத்தை கொடுப்பனவு செய்வதில் தவறுமிடத்து, மூன்று மாதங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு இருவகையில் ஒருவகையான மறியற்றண்டனைக்கும் ஆளாதலும் வேண்டும்.

ஆட்கள் குழுவினல் புரியப்படும் தவறுகள்.

64. இச்சட்டத்தின் கீழான அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளின் அல்லது விதிகளின் கீழான தவறென்று ஆட்கள் குழுவொன்றிஞல் புரியப்படுமிடத்து —

(அ) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்ருயின், தவறு புரியப்படும் நேரத்தில் அக்குழுவின் பணிப்பாளர், பொது முகாமையாளர், செயலாளர் அல்லது இதை யொத்த வேறு அலுவலர் ஒருவராக இருந்த ஒவ்வோர் ஆளும் ; அல்லது

(ஆ) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்ருக இராவிடின், தவறு புரியப்படும் நேரத்தில் அக்குழுவின் தலைவர், முகாமையாளர், செயலாளர் அல்லது இதை யொத்த வேறு அலுவலர் ஒருவராக இருந்த ஒவ்வோர் ஆளும்,

அத்தவறு தமது அறிவில்லாமல் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு முறையான விழிப்புக்கவனத்தைப் பிரயோகித்தாரென அவர் எண்பித்தாலொழிய, அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

65. (1) நீதிவான் ஒருவரது நியாயாதிக்கத்துக்குள்ளாக இருக்கும் ஏதேனும் இடத்தில் அல்லது ஏதேனும் வாகனத்தில் அல்லது ஏதேனும் கப்பலில் அல்லது வானூர்தியில், இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின் அல்லது விதியின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஏதேனும் தொலைத் தொடர்பு உபகரணம் நிறுவப்பட்டுள்ளதென அல்லது தாபிக்கப் பட்டுள்ளதென அல்லது பேணப்பட்டுள்ளதென அல்லது தொழிற் படுத்தப்பட்டுள்ளதென அல்லது ஏதேனும் தொலைத்தொடர்பு உபகரணம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதென, விற்கப்பட்டுள்ள தென அல்லது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளதென நம்புவதற்கு நியாயமான ஏது இருக்கின்றதென சத்தியத்தின்மீதான செய்தித் தகவல் மூலம் அத்தகைய நீதிவான் திருப்திப்பட்டவிடத்து, அந்த இடத்தினுள், வாகனத்தினுள், கப்பலினுள் அல்லது வானூர்தியினுள் நுழைந்து பரிசோதிப்பதற்கும், ஏதேனும்தொலைத்தொடர்புகளுக்குப் பயன்படுத்தப்பட்டதென அல்லது பயன்படுத்தக் கருதப் பட்டதென எவரேனும் பொலிசு அலுவலருக்குத் தோற்றுவதும் மேற்சொல்லப்பட்ட நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப் பட்டிருப்பதாக, விற்பனை செய்யப்பட்டிருப்பதாக அல்லது விற் பனைக்கு வைக்கப்பட்டிருப்பதாகத் தோற்றுவதுமான ஏதேனும் உபகரணத்தைக் கைப்பற்றுவதற்கும் அதிகாரமளித்து, அப் பொலிசு அலுவலருக்கு தேடுதல் ஆணையொன்றை அத்தகைய நீதிவான் வழங்கலாம்.

குறித்த சில விடயங்களில் நீதிவான் தேடுதல் ஆணை வழங்குதல முதலியன.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் கைப்பற்றப்படும் ஏதேனும் தொலைத்தொடர்பு உபகரணம், சொந்தக்காரன் அல்லது அதன் கட்டுப்பாட்டை வைத்திருக்கும் வேறு ஆள், இச் சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக்குற்றத்தீர்ப்பளிக்கப்படு வதன் மீது நீதிவானின் கட்டளை மூலம் பறிமுதல் செய்யப்பட்டு அரசுக்கு அளிக்கப்படலாம்.

## பாகம் VII
## பொது

66. (1) அமைச்சர் காலத்துக்குக்காலம் பொதுவான அல்லது விசேட பணிப்புகளை அதிகாரிக்கு எழுத்தில் வழங்கலாம்.

விசேட அல்லது பொதுப்பணிப்பு களை விடுப்ப தற்கு அமைச்ச ருக்குள்ள தத்துவம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் வழங்கப்பட்ட ஏதே னும் பொதுவான அல்லது விசேடமான பணிப்புக்கு இணங்கி யொழுகுதலும், எவரேனும் இயக்குநர் இணங்கியொழுகுவதை வலுவுறுத்தலும் அதிகாரியின் கடமையாதல் வேண்டும்.

67. அமைச்சர், தனது அலுவலக முறையான நோக்கங் களுக்காகத் தேவைப்படக்கூடிய அத்தகைய செய்தித்தகவலை எழுத்தில் தமக்குக் கொடுத்துதவும்படி அதிகாரியைக் காலத்துக் குக் காலம் பணிக்கலாம்.

அமைச்சரினால் விடுக்கப்படும் பொதிப்பணிப்பு கள்.

68. (1) இச்சட்டத்தின் கீழ் எந்தக் கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்தக் கருமங்கள் எல்லாம் தொடர்பில் அதிகாரி விதிகளையாக்கலாம்.

விதிகளையாக்கு தற்கு அதிகாரிக் குள்ள தத்துவம்.

(2) அதிகாரியினால் ஆக்கப்படும் எல்லா விதிகளும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக் கூடியவாறான பிந்திய தேதியன்று பயனுக்கு வருதலும் வேண்டும்.

(3) அதிகாரியினால் ஆக்கப்பட்ட எந்த விதியும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டாலன்றி, பயனுறுதலாகாது.

தொலைத் தொடர்புகளின் பயன்பாட்டைத் தடைசெய்வதற்கு அல்லது மட்டுப் படுத்துவதற்கு அரசாங்கத்துக்குள்ள தத்துவம்

69. ஏதேனும் பொது அவசரகால நிலைமை ஏற்பட்டதன் மீது அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு, அமைதி ஆகியவற்றின் நலன் கருதி, தொலைத்தொடர்பு மூலமான தகவல்களை ஒலிக் கடத்துதலும் ஒலி வாங்குதலும் தடைசெய்யப்படுதல் அல்லது மேற்பார்வைக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமையவிருத்தல் உசிதமானதாகவிருப்பின் அல்லது அவசியமாகவிருப்பின், அமைச்சர், மேலேயுள்ள ஈருமங்கள் பற்றித் திருப்திப்படுவதன்மேல், ஒன்றில் பொதுவாக ஆக்கப்பட்டு கசெற்றில்வெளியிடப்படும் அல்லது இலங்கையில் ஏதேனுமிடத்தில் அல்லது இலங்கையின் ஆட்புல நீர்ப்பரப்புகளில் உள்ள ஏதேனும் கப்பலில் அல்லது இலங்கையில் அல்லது இலங்கையின் மீதுள்ள அல்லது அதன் ஆட்புல நீர்ப் பரப்புகளில் அல்லது ஆட்புல நீர்ப்பரப்புகளின்மீதுள்ள ஏதேனும் வாகனத்தில் அல்லது வானூர்தியில் ஏற்பாடுசெய்யப்பட்ட ஏதேனும் தொலைத்தொடர்புச் சேவை தொடர்பில் எழுத்தில் விசேடமாக ஆக்கப்படும் கட்டளைமூலம் —

(அ) தடைசெய்தல் உசிதமாக அல்லது அவசியமாக உள்ள விடத்து, ஒன்றில் பொதுவாக அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட கப்பலில், வாகனத்தில் அல்லது வானூர்தியில் அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட தொலைத்தொடர்பினால் அல்லது இயக்குநரொருவரினால் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஆளினால் அல்லது வகுப்பினரான ஆட்களினால் தொலைத்தொடர்பு மூலம் தகவல்கள் ஒலிக்கடத்தப்படுவதை அல்லது ஒலிவாங்கப் படுவதைத் தடை செய்யலாம் ; அல்லது

(ஆ) மேற்பார்வையும் கட்டுப்பாடும் உசிதமாக அல்லது அவசியமாக உள்ளவிடத்து—

(i) ஒன்றில் பொதுவாக அல்லது இயக்குநரினால் அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட தொலைத் தொடர்புச் சேவைக்குப் பொறுப்பாகவுள்ள ஆளினால் தொலைத்தொடர்பு மூலம் தகவல்கள் எந்த நிபந்தனைகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் அமைய ஒலிகடத்தப்படக்கூடுமோ அல்லது ஒலிவாங்கப் படக்கூடுமோ அந்த நிபந்தனைகளையும் மட்டுப் பாடுகளையும் விதித்துரைக்கலாம்; அத்துடன்

(ii) தொலைத்தொடர்பு மூலம் ஒலிகடத்தப்படுவதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட, அல்லது தொலைத்தொடர்பு மூலம் ஒலிகடத்தப்பட்ட அல்லது ஒலிவாங்கப் பட்ட எல்லா வகுப்பினவான அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வகுப்பினவான அல்லது விவரணத்தினவான தகவல்களை இடையீடு செய்

வதற்கு அல்லது கணிக்கை செய்வதற்கு அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய ஏற்பாட்டைச் செய்யலாம்.

**இச்சட்டத்தின் கீழ் அல்லது அதிகாரியின் பணிப்பின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கான பாதுகாப்பு.**

**70.** (அ) இச்சட்டத்தின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் அல்லது விதியின் கீழ் அதிகாரியினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக அதிகாரிக்கெதிராக; அல்லது

(ஆ) இச்சட்டத்தின கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின கீழ் அல்லது விதியின்கீழ் அல்லது அதிகாரியின பணிப்பின் மீது அதிகாரியின் எவரேனும் அலுவலரால் சேவையாளரால் அல்லது முகவரால் நல்லெண்ணத்துடன் செய்யபபட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக அவருக்கெதிராக,

துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் தொடுக்கப்படலாகாது.

**ஒழுங்குவிதிகள்.**

**71.** (1) அமைச்சர், விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அது தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும், (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்கும் பங்கமின்றியும் அமைச்சர், பின்வருவனவற்றை விதித்துரைத்து ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.—

(அ) பிரிவு 5 இன் (ஊ) என்னும் பந்தியின் கீழ் அரசாங்கத்தினால் கொடுக்கப்படக்கூடிய ஏதேனும் பொதுவான அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்கியொழுகுவதற்கு அவசியமாக வரக்கூடிய அத்தகைய ஒழுங்காக்கல் வழிவகைகள் ;

(ஆ) 17 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் உரிமம் தவிர்ந்த இச்சட்டத்தின் கீழ் குறிப்பீடு செய்யப்படும் ஒவ்வொரு உரிமம் தொடர்பிலுமான உரிமத்தின் படிவம் ; உரிமத்துக்காக விண்ணப்பஞ் செய்யப்படும் விதம், உரிமத்தின் காலப்பகுதி; அத்துடன் உரிமத்தை வழங்குவதற்காகவும், உரிமத்தைப் புதுப்பிப்பதற்காகவும், செலுத்தப்படற்பாலதான கட்டணம் ;

(இ) ஆறும் பிரிவின் கீழ் நடாத்தப்படவுள்ள தொழினுட்பப் பரீட்சைகளும், பரீட்சார்த்திகளிடமிருந்து அறவிடற்பாலதான கட்டணங்களும் அத்தகைய பரீட்சைகளில் விதித்துரைக்கப்பட்ட தகுதிகாண் தரத்தை அடையும் அத்தகைய பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படவேண்டிய சான்றிதழ்களுக்கான படிவங்கள்;

(ஈ) தகவல்கள் என்ன முறையிலும் அல்லது எந்த நிபந்தனைகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் அமைவாக ஒலிகடத்தப்படவேண்டுமோ அந்த விதங்கள், முறை, நிபந்தனை மட்டுப்பாடுகள் என்பன ;

(உ) தகவல்களை முறையற்ற இடைமறிப்பதனை அல்லது வெளிவிடுதலைத் தடுப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்புக்கள் ;

(ஊ) எவரேனும் தொலைத்தொடர்பு அலுவலரின் கட்டுக்காப்பில் உள்ள தகவல்கள் அல்லது வேறு ஆவணங்களைத் தேடுகை செய்வதற்கு அல்லது அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை கொடுத்துதவுதற்கு அறவிடற்பாலதான கட்டணம் ;

(எ) அறுபத்தொன்பதாம் பிரிவின் கீழான கட்டளையொன்று வலுவிலில்லாதபோது இலங்கையின் ஏதேனும்இடத்தில் தொலைத்தொடர்பு உபகரணங்களைத் தொழிற்படுத்தும் அல்லது பயன்படுத்தும் ஒழுங்குவிதி ;

(ஏ) அறுபத்தொன்பதாம் பிரிவின் கீழான கட்டளையொன்று வலுவிலில்லாதபோது, எந்நேரத்திலும்—

(i) இலங்கையின் ஆட்புல நீர்ப்பரப்பினுள் இருக்கும் ஏதேனும் இலங்கையின் அல்லது வெளிநாட்டுக் கப்பலில் ; அல்லது

(ii) இலங்கையின் ஆட்புல நீர்ப்பரப்பினுள் அல்லது அதன் மேல் இருக்கும் இலங்கையின் அல்லது வெளிநாட்டின் ஏதேனும் வானூர்தியில்

இருக்கும் ஏதேனும் தொலைத்தொடர்பு உபகரணத்தைத் தடைசெய்தல் அல்லது அதனது தொழிற்பாட்டை அல்லது பயன்பாட்டை ஒழுங்குபடுத்தல் ;

(ஐ) ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வகுப்பினதான அல்லது விவரணத்தினதான தகவல்களின் இரகசியத்தன்மையை உறுதிப்படுத்தல்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதியொவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்பட்டபின்னர் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஒழுங்குவிதி எதுவும்; அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

192 ஆம் அத்தியாயத்தை நீக்குதலும் பேணலும்.

72. (1) (192 ஆம் அத்தியாயமான) தொலைத்தொடர்புக்கட்டளைச்சட்டம் இத்தால் நீக்கப்படுகிறது.

(2) மேற்கூறப்பட்ட கட்டளைச்சட்டத்தின் நீக்கத்தைப் பொருட்படுத்தாது—

(அ) இப்பிரிவு நடைமுறைக்கு வரும் தேதியன்று, தொடக்க அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம் எதிலும், நீக்கப்பட்ட கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தொலைத் தொடர்பு அதிகாரியினால் அல்லது அவருக்கெதிராகத் தொடுக்கப்பட்டு முடிவுறுதிருக்கும் ஒவ்வொரு வழக்கும் அல்லது வழக்கு நடவடிக்கையும் கூட்டுத்தாபனத்தினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட ஒரு வழக்காக அல்லது வழக்கு நடவடிக்கையாக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை ஒவ்வொன்றும் மேற்கொண்டு பூர்த்தியாக்கப்பட்டு அதற்கிணங்க வலுவுறுத்தவும் படலாம்.

(ஆ) இப்பிரிவு நடைமுறைக்குவரும் தேதியன்று வலுவிலுள்ளவாறான நீக்கஞ்செய்யப்பட்ட கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்கு விதியும் அல்லது விதியும், அத்தகைய ஒழுங்குவிதி அல்லது விதி இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதவைவாகவிராத அளவுக்கு ஏற்றமாற்றங்களுடன் இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியாக அல்லது விதியாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் அல்லது விதிகளினால் திருத்தவும்படலாம் அல்லது ஒழிக்கவும்படலாம் ;

(இ) எக்கருமங்கள் தொடர்பிலான விண்ணப்பங்களுக்கு இச்சட்டத்தின் கீழ் உரிமமொன்று தேவைப்படுத்தப் படாதுள்ளதோ அந்த விண்ணப்பங்கள் தவிர, நீக்கஞ் செய்யப்பட்ட கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இப்பிரிவு நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர் தொலைத்தொடர்பு அதிகாரிக்குச் செய்யப்பட்டதும் விதித்துரைக்கப்பட்ட ஒரு விவரணத்தினதும் அத்தேதியில் முடிவுசெய்யப்படாததுமான உரிமத்துக்காக ஒவ்வொரு விண்ணப்பமும், இச்சட்டத்தின்கீழ் அதிகாரிக்குச் செய்யப்பட்ட ஒரு விண்ணப்பமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இப்பிரிவு நடைமுறைக்கு வரும் தேதிக்குப்பின்னர் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய விண்ணப்பத்தை அதிகாரி கையாளுதலும் வேண்டும் ;

(ச) இப்பிரிவு நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர் முன்னர், நீக்கஞ்செய்யப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 3 ஆம், 4 ஆம் பிரிவுகளின்கீழ் தொலைத்தொடர்பு அதிகாரியினால் வழங்கப்பட்டதும் வலுவிலுள்ளதுமான ஒவ்வோர் உரிமமும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அதிகாரியினால் வழங்கப்பட்ட உரிமமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(உ) ஏதேனும் வழக்கில், கருமத்தில், நடவடிக்கையில் அல்லது விடயத்தில் ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையினால் அல்லது வேறு குழுவினால் தொலைத்தொடர்புத் திணைக்களத்துக்குச் சாதகமாக அல்லது எதிராக எழுதி நிறைவேற்றப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் தீர்வை, கட்டளை அல்லது அளிப்பு, இப்பிரிவு நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து கூட்டுத்தாபனத்துக்குச் சாதகமாக அல்லது எதிராக எழுதி நிறைவேற்றப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஒரு தீர்வையாக, கட்டளையாக அல்லது அளிப்பாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க வலுவாக்கப்படுதலும் வேண்டும்.

பொருள்கோடல்

73. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய.—

"பணிப்பாளர்- தலைமையதிபதி" என்பது அப்போதைக்குத் தொலைத்தொடர்புப் பணிப்பாளர் — தலைமையதிபதி என்னும் பதவியை வகிக்கும் ஒருவராகும் ;

"தகவல்" என்பது, தொலைத்தொடர்பு மூலம் அனுப்பப்பட்ட அல்லது ஒலிவாங்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட அல்லது தொலைத்தொடர்புமூலம் அனுப்பப்படுவதற்கு அல்லது ஒப்படைக்கப்படுவதற்குத் தொலைத் தொடர்பு அலுவலரொருவருக்குக் கொடுக்கப்பட்ட ஏதேனும் தகவற் தொடர்பு என்று பொருளாவதுடன், சங்கீதத்தையும், உரையாடல்களையும், பேச்சுக்களையும், விரிவுரைகளையும், மேடை அரங்கேற்றங்களையும், எழுத்தையும், எழுத்துருக்களையும், உருவங்களையும் அல்லது படங்களையும், அத்துடன் எந்திரத்தொகுதி அல்லது உபகரணத்தைத் தூண்டுதல் அல்லது அதன் கட்டுப்பாடு ஆகியவற்றையும் உள்ளடக்கும் ;

"இயக்குநர்" என்பது, தொலைத்தொடர்புத் தொகுதியொன்றை இயக்குதற்கு 17 ஆம் பிரிவின்கீழான உரிமத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் என்று பொருளாகும் ;

"கம்பம்" என்பது, ஒரு தொலைத்தொடர்புக் கம்பியைத் தாங்குவதற்கான, தொங்கவிடுவதற்கான அல்லது ஆதாரப்படுத்துவதற்கான ஒரு கம்பம் , கம்பு, சுவர்க் கம்பு, தூபம், நிறுத்தி, கட்டமைப்பு அல்லது வேறு உபாயம் என்றும் பொருளாகும் ;

"விதித்துரைக்கப்பட்ட" என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப் பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட என்று பொருளாகும்,

"பகிரங்க ஆளியிடப்பட்ட அமைப்பு" என்பது, இச்சட்டத் தின்கீழ் கொடுக்கப்பட்ட உரிமத்தின் அதிகாரத்தின் கீழ் இலங்கையிலுள்ள பொதுமக்களுக்கு அதன் வாயிலா லாக இயக்குநர் எத்தொலைத்தொடர்புச் சேவைகளை ஏற்பாடு செய்யக்கூடியவராகவுள்ளாரோ அச்சேவைகளில் இணைப்புக்கு உரியனவான சங்கிலிக்கோர்வை இணைப் புக்கூடாக அந்தந்த மையப் புள்ளிகளின் வாயிலாக ஆளியிடப்பட்ட இணைப்பைப் பயன்படுத்தி, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வரையறுக்கப்பட்ட புள்ளி களுக்கிடையே தொலைத்தொடர்பை இடம்பெறச் செய் வதற்கு அவற்றுக்கிடையே இணைப்புகளை ஏற்பாடு செய்கின்ற ஒரு தொகுதி மையப்புள்ளிகளும் சங்கிலிக் கோர்வைகளும் என்று பொருளாகும் ;

"வானொலி அலைக்கற்றை" என்பது, தேவைப்படுத்தப்பட்ட தூர அமைவிடத்தில் கதிர் வீச்சல்மூலம் உருவாக்கப் பட்ட சைகை வலிமையை அதிகரிப்பதற்கு உணர் கொம்பைப் பயன்படுத்தி வலுவைக் குவியப் பண்ணும் மின்காந்த கதிர்வீச்சல் என்று பொருளா கும் ;

"தொலைத்தொடர்பு" என்பது, கட்புலன்சார் வழிவகைகள் மூலம் அல்லது கம்பி அல்லது வானொலி அலைகள் மூலம் அல்லது வேறேதேனும் மின்காந்த முறைமை மூலம் எத்தன்மையினவுமான சமிக்ஞைகள், சைகைகள், எழுத்து, உருவங்கள், ஒலி அல்லது செய் தித் தகவல் என்பவற்றின் ஏதேனும் ஒலிக்கடத் துகை, வெளிவிடுகை அல்லது ஒலிவாங்குகை என்று பொருளாகும் ;

"தொலைத்தொடர்பு உபகரணம்" என்பது —

(அ) தொலைத்தொடர்புத் தொகுதி ஒன்றின்மூலம் அனுப்பப்படவுள்ளதும் அல்லது அனுப்பப்பட் டுள்ளதும், "தொலைத்தொடர்புத் தொகுதி" யினுள் அடங்குகின்றதுமான எதனையும் ஒலிக்கடத் துவதில் அல்லது ஒலிவாங்குவதில் ; அல்லது

(ஆ) அத்தகைய ஒரு தொகுதியின் நோக்கங்களுக்காக அந்த வரைவிலக்கணத்துள் வரும் எதனையும் அனுப்புவதில்—

பயன்படுத்துவதற்காக நிர்மாணிக்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட உபகரணம் என்று பொருளாகும்;

"தொலைத்தொடர்புக் கம்பி" என்பது, அதனை உள்ளடக்கு கின்ற ஏதேனும் உறையுடனோ, மேலுறையுடனோ, டியூப்புடனோ அல்லது குழாயுடனோ, தொலைத் தொடர்பின் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு முறுக்குக் கம்பி அல்லது முறுக்குக் கம்பிகள் அல்லது கட்புலநார் என்றும், அதனைப் பொருத்தும், காப்பிடும், பாதுகாக்கும் அல்லது புவித்தொடுப்புச் செய்யும் நோக்கத்துக்காக அதனோடு இணைக்கப்பட்ட எவையேனும் துணைக்கருவிகளும் உபகரணங்களும் என்றும் பொருளாகும்.

"தொலைத்தொடர்பு அமைப்பு" என்பது, இணைப்புக்குரியன வான சங்கிலிக் கோர்வை இணைப்பு வாயிலாக மையப் புள்ளிகளில் தாபிக்கப்பட்ட உரிமை இணைப்புகளை அல்லது ஆளியிடப்பட்ட இணைப்புகளையும் பயன்படுத்தி இரண்டு அல்லது அதற்கதிகமான வரையறுக்கப்பட்ட புள்ளிகளுக்கிடையேயான தொலைத்தொடர்பை இடம் பெறச் செய்வதற்கு அவற்றுக்கிடையே இணைப்புக்களை ஏற்படுத்தும் ஒரு தொகுதி மையப்புள்ளிகளும் சங்கிலிக் கோர்வைகளும் என்று பொருளாகும் ;

"தொலைத்தொடர்பு அலுவலகம்" என்பது, தகவல்களை ஒலிக் கடத்துவதுடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான ஏதேனும் வேலை கொண்டுநடாத் தப்பட்டு அதிகாரியின் அல்லது இயக்குநரொருவரின் கட்டுப்பாட்டின்கீழுள்ள அல்லது அதனால் அல்லது நிருவகிக்கப்பட்ட ஓர் அலுவலகம் அல்லது கட்டிடம் என்று பொருளாகும் ;

"தொலைத்தொடர்பு அலுவலர்" என்பது, இயக்குநரொரு வரினால் ஏற்பாடு செய்யப்பட்ட தொலைத்தொடர்புச் சேவை சம்பந்தமாக ஒன்றில் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ தொழிலுக்கமர்த்தப் பட்ட எவரேனுமாள் என்று பொருளாகும் ;

"தொலைத்தொடர்புச் சேவை" என்பது, தொலைத்தொடர்புத் தொகுதிமூலம் ஏதேனும் தகவலை அனுப்புவதைக் கொண்டுள்ள ஒரு சேவை, அல்லது தொலைத் தொடர்புத் தொகுதிக்கு இணைக்கப்பட்டுள்ள அல்லது இணைக்கப்படவுள்ள உபகரணங்களின் நிறு வுகை, பேணுகை, சரிக்கட்டுகை, பழுதுபார்ப்பு, மாற்றம், இடப்பெயர்ப்பு, அகற்றுகை அல்லது மாற்றீடு என்பவற்றைக் கொண்டுள்ள ஒரு சேவை என்று பொருளாகும் ;

"தொலைத்தொடர்புத் தொகுதி" என்பது, மின்சார, காந்த மின்காந்த, கட்புலன்சார், மின் இரசாயன அல்லது மின்பொறியியல் வலு என்ற ஊடகத்தின்மூலம்

பின்வருவனவற்றை அனுப்புவதற்கான ஒரு தொகுதி என்று பொருளாகும் —

(அ) பேச்சு, சங்கீதம், மற்றும் வேறு ஒலிகள் ;

(ஆ) கட்புல உருவங்கள் ;

(இ) இயற்கையான அல்லது செயற்கையான மொழிகள், படங்கள், வரைதல்கள், பட்டோலைகள் என்பவற்றிலான சின்னங்களை, சொற்றொடர்களை அல்லது வசனங்களைக் கொண்டுள்ள, இரு பரிமாண வடிவத்தில் முன்வைக்கப்படுதற்கு முன்னைப்பட்ட தான மனிதன் விளங்கிக் கொள்ளக்கூடிய தான செய்தித் தகவல் ; அல்லது

(ஈ) எந்திரத் தொகுதியை அல்லது உபகரணத்தைத் தூண்டுவ தற்கான அல்லது கட்டுப்படுத்துவதற்கான சைகைகள் ;

"முடிவிட உபகரணம்" என்பது, உரிமமளிக்கப்பட்ட தொகுதி மூலமான தொலைத் தொடர்பில் பயன்படுத்தப்படுவதும் செய்யப்பட்ட தகவல்களைத் தொடக்குவதற்காக அல்லது முடிவுறுத்துவதற்காக அவ்வுரிமமளிக்கப்பட்ட தொகுதியில் அல்லது வேறு ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட தொகுதியில் உள்ளடக்கப்படாததுமான ஏதேனும் தொலைத்தொடர்பு உபகரணம் என்று பொருளாகும்.

74. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஒவ்வாமை ஏதேனும் ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல்